ஞாயிறு வெளியீடு   ஆண்டு சந்தா ரூ. 5   தனிப்பிரதி 0—1—3   REGD. No. M. 4642

திராவிடநாடு

மலர் 4 | காஞ்சீபுரம் 20—1—1946 | இதழ் 40

சரிதச் சித்திரம்:

★ புலிநகம் ★

—(சௌமியன்)—

1659! மராட்டிய மண்டலத்திலே மாவீரன் சிவாஜி, வீரவெற்றிகளின் பயனாக, விடுதலைவேட்கை கொண்டவர்களின் மனதிலே கொலுவீற்றிருந்தசமயம். மணிமுடி தரித்துக்கொள்ளவில்லை, ஆனால் அவன் காலடியிலே கிடந்ததுமணிமுடி! ஓய்வுதான் இல்லை, பட்டாபிஷேகத்துக்கான காரியங்களைக் கவனிக்க. மராட்டிய மன்னன் என்ற பட்டம் இல்லையே தவிர, நிலை அதுதான். யார் இந்த மாயாவி? மலைகளை அதிரச் செய்கிறான்! மண்டலங்களை மண்டியிட வைக்கிறான். உழவர்களை வீரராக்குகிறான்! எங்கும் அவன் வெற்றி! பரதகண்டத்திலே புதியதோர் ஒளியானான்! பரவிவரும் இஸ்லாமிய ராஜ்யத்துக்குப் புயலானான்! இவனை இப்படியேவிட்டுவைப்பதா? வீரன், தீரன், இரட்சகன், அவதாரபுருஷன் என்றெல்லாம் புகழப்படுகிறான், புதிய அரசைச் சிருஷ்டிக்கிறான், சாத்பூரா மலைச்சரிவுகளிலெல்லாம் அவனுடைய போர் வீரர்கள்! குகைகளிலே கூடித்திட்டம் வகுத்துவிடுகிறான்; பிறகு அரண்மனைகளிலே அழுகுரல் கேட்கிறதே. சரித்திரத்திலேஇடம்தேடும்,இந்தச்சாமான்யக்குடியானவனை இப்போதுவளரவிடுவது, ஆபத்து.எதிர்காலத்திலே அவன் புகழ்நிலைத்துவிடும்! சிவாஜியின்வெற்றிநிறுத்தப்படவேண்டும்! —என்று இந்திய உபகண்டத்திலே ஆங்காங்கு இருந்த அரசுகள்பலவற்றிலும்பேசப்பட்டகாலம். ஆச்சரியமும் அச்சமும் கலந்தபேச்சு, எங்கும், அந்த அஞ்சா நெஞ்சனைப் பற்றி. அவனை அலட்சியப்படுத்த முடியாது. அவன் வளர்ச்சியைச் சாமான்யமாகவும் கருதக்கூடாது. மண்ணிலேசெம்பொன் கண்டெடுக்கிறான், மங்கிய மராட்டியத்திலே மாணிக்கங்களை உண்டாக்கிவிட்டான். மாசுமருவற்றவன்என்றும் புகழப்படுகிறான். குடியில்லை, கூத்தியில்லை, கோலாகலவாழ்வு இல்லை, வீரத்தின்சின்னமாய்விளங்குகிறான், மாற்றுக்குறையாதமராட்டியத்தங்கம்! இந்தநிலையை நீடிக்கவிட்டால் இனி நமக்கு வரும் பங்கம் — என்று அரச பீடத்தில் அமர்ந்திருந்தவர் அனைவரும் எண்ணியகாலம் அது. 1659-ம் ஆண்டு, சிவாஜி, ஜாகீர்தார்நிலைக்காக அல்ல, சாம்ராஜ்யாதிபதியாவதற்காகவே வேலை செய்கிறான் என்பதுவிளங்கிவிட்டது.

*   *   *

5000 குதிரைவீரர்கள்! 7000 காலாட்படைகள்! போர் முரசு கொட்டியபடி இப்பெரும்படையைத்தலைமைதாங்கிநடத்திவந்தான்தளபதி அப்சல்கான். குதிரைப் படை கிளப்பிய தூசுபோல, சிவாஜியின் வெற்றிகள் இனியாகும்என்று அப்சல்கான் எண்ணினான். கோபத்தோடு, உறுதியோடு,அசைக்கமுடியாத நம்பிக்கையோடு, சென்றான், அப்சல்கான். படையின்ஆர்ப்பரிப்புக்கு இடையிலேயும், அவனுக்கு, புறப்படு முன்பு, தனக்கும் மன்னனுக்கும்நடந்தஉரையாடல்காதிலே வீழ்ந்த வண்ணமே இருந்தது. வாழ்க்கையிலே முக்கியமான கட்டம், அது—அவனுக்குமட்டுமல்ல—அவன் பணிபுரிந்துவந்த அரசுக்கே.

"அப்சல்!உன்வாழ்நாளிலேயே, மிகமுக்கியமான செயலில்இறங்குகிறாய். இதிலே நீ வெற்றிபெறுவதைப் பொறுத்துத்தான், இருக்கிறது பீஜப்பூர் மண்டலத்தின் புகழ்" என்று மன்னன் கூறியபோது, "மன்னா! அந்த மலைஎலி, இங்கு உலவுவது, நமது மண்டலத்துக்கே இழிவு தருவது என்பதை உணருகிறேன். இதோ புறப்படுகிறேன், சிவாஜியைச் சிறைபிடித்துவருவேன். வெற்றியுடன்திரும்பிவருவேன், இது உறுதி" என்று வீரமாகப்பேசியதும், அப்சல்கானின் நினைவிலே பதிந்துவிட்டது. படையைப்பார்க்கிறான், பூரிக்கிறான்,தன்திறமையை எண்ணுகிறான், மகிழ்கிறான்; சிவாஜியின் கண்முன் இப்படை தோன்றினால்போதும், பீஜப்பூர் மன்னன் முன்மண்டியிட, அந்த மார்தட்டும் வீரன், ஓடோடி வருவான் என்று நினைத்தான்.அப்சல்கான், சாமான்யனல்ல, வீரப்படைகளை நடத்திச் சென்று வெற்றிபல கண்டவன். எனவே அவன் எண்ணியது, வீண் புகழ்ச்சியுமல்ல.

*   *   *

காடு, கூடாரமாயிற்று! குதிரைகள், காணாறுகளிலே நீர் அருந்தின! கடுகிச்சென்ற ஒற்றர்கள், கடும்புயல் மராட்டியத்தைநோக்கிவந்துகொண்டிருப்பதைக்கூறினர்.கலங்காதஉள்ளந்தான், ஆனாலும் காலாட்படை 7000, குதிரைப்படை 5000, படைத்தலைவன் அப்சல்கான் என்று கேள்விப்பட்டால், சிவாஜியும், சோகிக்கத்தானே வேண்டிநேரிடும். இவ்வளவு பெரியபடையை, நேரடியாகத்தாக்கி வெற்றிபெற முயற்சிப்பது, வீண்வேலை என்பதை, வீரத்துடன் யூகமும் தெரிந்த சிவாஜி தெரிந்துகொள்ளாமல்இல்லை. அப்சல்கான், பிரதாப்கார் நகருக்குவெளியே, சிவாஜிதன் சிறுபடையுடன் நகருக்குள்ளே! பெரும்புயல் வெளியே! ஆபத்துக்குழ் தனக்கும் இடையிலே இருந்ததுஒரே ஒருகாடு—அதிலே இருந்ததும் ஒரே ஒருபாதை. அந்தப்பாதையிலே பீஜபூர் படைகள்நுழைந்தால், சிவாஜியின் படை, தப்பிச் செல்லவும் முடியாது. அது வரை பெற்ற வெற்றிகள் அவ்வளவையும், அப்சல்கானுக்குக் காணிக்கையாக்கிவிட வேண்டியதுதானா? மராட்டியம், மண்டியிட வேண்டியதுதானா? பீஜபூர் சுல்தானிடம் பணியத்தான் வேண்டுமா? வேறு மார்க்கமே இல்லையா?

*   *   *

1946! இன்று, இபுராகீமுக்கு, இந்துதேசசரித்திரத்தைப் போதிக்கிறார் சுந்தரேசஐயர்! அப்சல்கானின் பெரும்படையைக் கண்ட அஞ்சாநெஞ்சன் சிவாஜி, என்ன செய்தான்? அப்சல்கானைத் தனியாகச் சந்திக்க வேண்டுமென்று கூறினான், பீஜபூரான் வந்தான், அவனைத் தழுவுவதுபோலச்,சிவாஜி நடித்துத், தன்கரத்திலே வைத்திருந்தபுலிநகத்தால் கீறிக்கொன்றான்! —என்று வரலாற்று ஆசிரியர்கூற, இபுராகீம், தன்னையுமறியாது "பத்மாஷ்" என்று ஏச, துஷ்டநிக்ரஹார்த்தம் எதையும் செய்யலாம் என்று வரலாற்று ஆசிரியர் கொஞ்சம் வைதீக போதனையும் புரிகிறார். என்ன சமாதானம் சொன்னாலும், இபுராகீம், "இது சதிச்செயல்! நம்பிக்கைத் துரோகம்! வஞ்சனை! ஒரு வீரனின் இலட்சணமல்ல!" என்று கூறாமல் இருக்கமுடியுமா? உண்மையிலேயே, மாவீரன் செய்யலாமா? சமரசம்பேசஅழைத்துத் தழுவி, தழுவுகிற நேரத்தில், வஞ்சகமாகக் கொல்வது,வீ ர ம ர பா? இல்லை! இபுராகீம் மட்டுமல்லவெளி உலகுமுழுதும், சிவாஜி, அப்சல்கானைக் கொன்றார், அக்ரமம், சதி செய்தார், தன் கீர்த்திக்கே இதனால் ஓர் பழிதேடிக்கொண்டார்என்றே கூறும். ஆனால் இபுராகீமுக்கும் தெரியாது, இவ்வளவுபெரிய இலட்சியபுருஷன் ஏன் இந்தச்சதிச்செயல் புரியவேண்டும் என்று. தனிமையிலே சிந்தித்துச் சோகிக்கும், தோழர்களுக்கும் தெரியாது, ஏன் சிவாஜி அங்ஙனம் செய்தார்? வீர சிவாஜியை இந்த வஞ்சகம் புரியச் செய்த சூக்ஷமசக்திஎது? என்ற உண்மை. வரலாற்று ஆசிரியரும் அதைக்கூறமாட்டார். சிவாஜி துரோகம் செய்ததாக, இபுராகீம் எண்ணிக்கொண்டால் அவருக்கு என்ன நஷ்டம், அவர் இபுராகீம் இனமல்ல; சிவாஜி பிறந்த மராட்டியக் குடியுமல்ல, அவர் பூதேவர் பரம்பரை! சிவாஜியின் போக்குக்கான உண்மைக் காரணம் என்ன? அதை அறிய மீண்டும் நாம் கொஞ்சநேரம், அப்சல்கானின் படையுடன் போகவேண்டும். போவோம்.

*   *   *

வாளையும் வேலையும், கூர்பார்த்துக்கொண்டும், இன்ன விதமான நிலையிலே இவ்விதமாகக் கத்தியை வீசவேண்டும், இன்ன இடத்திலே முன்னேறித்தாக்கவேண்டும்,இந்த இடத்திலே, பக்கவாட்டில் தாக்க வேண்டும், என்று போருக்கான எண்ணம் ஏற்பாடு ஆகியவைகளிலே, அப்சல்கானின் படை ஈடுபட்டிருந்தது. கூடாரத்திலே அமர்ந்து, வரஇருக்கும் வெற்றியைநினைத்துக்,குதூகலமாக வீற்றிருந்தான் அப்சல்கான். அந்தக்காட்டிலே, கோபிநாத் பண்டிட்ஜீயும், அதே இடத்திலே உலவுகிறார். அவரிடம் வாள் இல்லை, ஆனால் மற்றக்குலத்தவரைத்தம் தாளடியிலே காண்பதற்கான மகத்துவத்தை மகேஸ்வரனிடம் பெற்றதாகக்கூறிக்கொள்ளும் பிரம்ம குலத்தவர், கோபிநாத். அப்சல்கான், சிவாஜியைமுறியடிக்கப்படைபலத்துடன் வந்ததுடன், சமரசம்பேசச்சிவாஜி விரும்பினால், அதை முன்னின்று, முடித்துவைக்க அந்தம்ப்புரியானையும் அழைத்துவந்தான். கோபிநாதரின் பின்திலே, என்னென்ன எண்ணங்கள் கிளம்பின என்பதை வரலாறு எங்கனம் எடுத்துக்காட்டும்! சரிதங்களிலே சம்பவங்களைக் கொண்டுதானே, அவற்றுக்கான,

(அடுத்த பக்கம் பார்க்க)

இந்தியாவில் ஜாதிபேதம் ஒழிய 50-லட்சம் டாலர் நன்கொடை

டோரன்டோ, ஜன-12.

இந்தியாவில் ஜாதிபேதத்தை ஒழிக்க 50-லட்சம் டாலர்செலவிட வேண்டுமென்று மாக்வாக்கா என்ற ஒருகனடா பணக்காரர், சாகும் தருவாயில், ஒரு உயில் எழுதிவைத்துள்ளார். இவர் இந்தியாவில் பிறந்தவர். இவர்தகப்பனார் ஒருஐரிஷ்காரர். இவருடையதாயார் ஒருபார்ஸி. இவர் கனேடியன் பசிபிக் ரயில்வே கம்பெனியை நடத்திவந்தார். இவர் 1944-ல் மரணமடைந்தார். இன்னும் பல கனடா தர்மஸ்தாபனங்களுக்கு 2,500,000 டாலர் எழுதிவைத்திருக்கிறார். தம்மிடம்வேலைபார்த்த பலருக்குத் தாராளமாகப் பணம் எழுதி வைத்துள்ளார்.

இவருடைய மூன்று சகோதரர்களைத் தவிர வேறு யாருக்கெல்லாம் பணம் எழுதிவைத்திருக்கிறாரோ, அவர்களுடைய விலாசங்கள் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன. வெகு சிரமத்துடன்தான் அத்தனை பேரையும் கண்டுபிடிக்க முடிந்தது.

அறிவு நாள் இது! கொடுமை அழிந்தே தீரும்!

ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,
சின்ன சௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.

புலிநகம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

சிலபல சிந்தனைகளை யூகிக்கமுடியும்! கோபிநாத் பண்டிட்ஜி, தூது அனுப்பப்பட்டார் சிவாஜியிடம். பெரிய தோர்படை தயாராக இருக்கிறது, என்பதை எடுத்துக்கூறி, சிவாஜியைப் பணிய வைக்கக்கிளம்பினர் கோபிநாத். மகத்தான, பொறுப்பானஓர்செயல் தரப்பட்டது, என்பதைஎண்ணும்போது கோபிநாத்பெருமை அடைந்துதான் இருப்பார். ஒரு மண்டலாதிபதியின் தூதராக, மற்றோர் மாவீரனிடம் செல்வது, சாமான்யமான காரியமல்ல. பண்டிட்ஜி, புறப்பட்டார். நாடுகளைக்காடாக்கிவிடக் கூடிய படைபலம் பெற்றிருந்த அப்சல்கானின் தூதராகக் கிளம்பிய அந்த ஆரியனின் அகம், முதலில் பெருமை கொண்டிருக்கும், பிறகோ சிந்தனை வேறுக்கித்தான் இருக்கும். பரதகண்டத்திலே பல்வேறு இடங்களிலே இருந்தநிலைபற்றிய நினைப்புதோன்றியிருக்குமா? கோபிநாத்தின் மனக்கண்முன் அப்போது, என்னென்ன காட்சிகள் தோன்றியிருக்கும். அந்நிறுபுறம் டில்லியாகி, அங்கு அழகுக்கசீப் அரியாசனம் ஏறும் காட்சி ஓர் புறம்! வங்கத்திலே இஸ்லாமியரின் வல்லமையால் ஆக்கிவைக்கப்பட்ட காட்சி மற்றோர்புறம்! பீஜபூரிலே ஒருசுல்தான்! தன்னைத்தாக்கபோகச்செய்த அப்சல்கான், துடிதுடிக்கும் படையுடன் இருக்கும் காட்சி! எதிரே, பிரதாப்கார் நகரம்—அங்கேயோ, மராட்டிய குலம் ஆள்கிறது! ஒருபுறம் இஸ்லாமியர், மற்றோர்புறம் மராட்டியர்! ஆரியர் ஆட்சிப்பீடத்திலே எங்கும் தென்படவில்லை. பெருமையுடன், அந்த பூபாகத்தைப்பாரத்வர்ஷம், பரதகண்டம், ஆர்யாவர்த்தம், என்று பேசிக்கொள்ளும் ஆரியர், அரச பீடத்திலே இல்லை! தூது போகும் வேலைதான் கிடைத்தது! கோபிநாத்பண்டிட்ஜியின், மனக்கண், இவைபோன்ற காட்சிகளைக் காணுதிருந்திருக்கமுடியாது!

* * *

அப்சல்கான் அனுப்பிவைத்த கோபிநாத் பண்டிட்ஜி, சிலசகாக்களும் பணியாட்களும் புடைசூழ, நகருக்குள் நுழைந்தார், "பணிந்துவிடுசிவாஜி! இல்லையேல் அழிவுஇந்நகருக்குள் நுழையும்! நீஅஞ்சாநெஞ்சனாக இருக்கலாம், ஆனால், அப்சல்கானிடம் இருக்கும்படை, பிரம்மாண்டமானது" என்றுகூற. சிவாஜி, கோபிநாத்பண்டிட்ஜியை, மரியாதையாக வரவேற்றான், உபசாரம்பலபுரிந்தான், அவருடன் வந்தோரும் தங்கியிருக்க, இடவசதிகள் ஏற்பாடுசெய்துதந்தான். ஒரு பலம்பொருந்திய துரைத்தனத்தின் தூதுவராக வந்துள்ள பண்டிட்ஜியை, மிகக்கௌரவமாக நடத்த வேண்டுவது முறைதானே! முறை தெரியாதவனா, வீரசிவாஜி! முறைமட்டுமல்ல, கொஞ்சம் யூகமும் தெரிந்தவர். கோபிநாத்பண்டிட்ஜி பிரம்மகுலத்தவர், என்பதுதெரிந்ததும்சிவாஜிக்கு,வரஇருக்கும்ஆபத்தினின்றும்தப்ப, ஒருவழிகிடைக்கக் கூடும் என்றநம்பிக்கை பிறந்தது. கோபிநாதருக்குச்செய்தமகத்தான உபசாரத்தின் உட்பொருள் அதுதான். அவருடன்வந்தவர்களுக்குத் தரப்பட்ட விடுதிகளினின்றும், கொஞ்சம்தொலைவானஇடத்திலே, பண்டிட்ஜிக்கு, தங்கும் இடம் அமைக்கப்பட்டது. நள்ளிரவில், சிவாஜி, அந்தத்தனியிடம்சென்றான், கோபிநாத்பண்டிட்ஜியிடம், தனியாகப்பேச! தூதுகூற வந்தவரை, இலகுவில் தன்பக்கம் இழுத்துக் கொள்ளமுடியும் என்றநம்பிக்கையில். மராட்டிய மாவீரரின் நம்பிக்கைவீண் போகவில்லை. மறையவர், மலர்ந்த முகத்துடனேயே வரவேற்றார் சிவாஜியை.

"மாமுனியே! மராட்டியமண்டலத்துக்குவந்துள்ள ஆபத்தைநினைக்கும்போது..........."

"மனக்கஷ்டமாகத்தான் இருக்கும்.இருந்தாலும்மாவீரனே! பணிவதன்றி வேறுமார்க்கம்இல்லை"

"பணிவதுபற்றியல்ல பூதேவா நான்சோகிப்பது. என்மனோபீஷ்டம், சங்கல்பம், பாழாகுமே."

"படைபலம் அவனிடம்அதிகம்! எதிர்த்துப்பயன் இல்லை. தோல்வி நிச்சயம் சம்பவிக்கும். அழிவை அணைத்துக்கொள்வாருண்டோ?"

"மறையவரே! என்சங்கல்பம், இங்கு, பாரதவர்ஷத்திலே, நமது ஜென்ம பூமியில், புண்ய பூமியில், இந்து சாம்ராஜ்யம் சிருஷ்டிக்க வேண்டும் என்பதுதான். என் பொருட்டு அல்ல! பிராமணோத்தமர்களின் பொருட்டே, நான்இந்தப் பாடுபடுகிறேன். என்இலட்சியம் தங்களுக்குத்தெரிந்திருக்கும். பசு, பிராமணர், இவற்றின் இரட்சகன் சிவாஜி, என்பதைஸ்தாபிக்கவேண்டுமென்பதே என்நோக்கம். இந்த ராஜ்யம் ஏற்பட்டால்தான், பூர்வ பெருமை நிலைக்கும், பண்டைச் சிறப்பு மீண்டும்தோன்றும், ஆரியாவர்த்தத்திலே, வேதாச்சாரமும், குலதர்மமும், ஜொலிக்கும்.ஸ்வாமி! சித்தம் குழம்பியிருக்கும் நான்.தங்களை யாசிக்கிறேன், என்சங்கல்பம் ஈடேறவழிசெய்யுங்கள்,சனாதனதர்மந்தழைக்கஉபாயம்கூறுங்கள்,இந்தபீஜபூர் படையினால், அழிந்துவிடலாமோ, நான்பாடுபட்டுவளர்த்து வரும், பால்யன்! பூஜிதரே!ஒருவழி காட்டும்!"

"நானா?வழிகாட்டுவதா? சிவாஜி! நான் பீஜபூர் சுல்தானின், தூதுவன்!"

"இல்லை, ஸ்வாமீ! தாங்கள்பாரதவர்ஷத்தின் பிரதிநிதி! ஆர்யாவர்த்தத்தை இரட்சிக்கவேண்டியஆர்யசிரேஷ்டர்! தங்களை அப்சல்கான் அனுப்பியிருந்தாலும்சரி,பீஜபூர்சுல்தான் அனுப்பியிருந்தாலும் சரி, நான் தங்களை ஆண்டவன் அனுப்பிவைத்ததூதுவர் என்றே கொள்கிறேன். ஆரிய!ஆரியாவர்த்தத்துக்கு ஆபத்துநேரிடுவதைத்தடுக்கப்,பிரம்மகுலத்தவராகிய உமக்கு உரிமை உண்டு! உமது கடமையும் அதுதான். நான், ஆரிய சேவாச்சைன்யத்தை நடத்துபவன், கட்டளை பிறப்பித்துவிடும், ஆரியாவர்த்தத்தை அன்னியரிடம் தந்துவிடவா? அப்சல்கானின்அடிபணியவா? ஆரிய! நான் அடிபணிவது என்றால் என்ன அர்த்தம்? ஆரியாவர்த்தம்அழிந்ததுஎன்றுபொருள்"

கோபிநாத்பண்டிட்ஜிவந்ததோ, சிவாஜியைப் பணியவைக்க! சிவாஜியோ,மேலே தீட்டப்பட்டகருத்துகளைக் கொட்டினான்கோபிநாதர் முன்பு. கோபிநாத் கூறிவிட்டிருக்கலாம், "சிவாஜி! துரோகம்செய்ய முடியாது! நம்பிக்கை மோசம், மகாபாபம்! நான் பீஜபூர் சுல்தானின் உப்பைத்தின்பவன், அவனுக்கு ஊறு தேடமாட்டேன். அது கயவர் செய்யும் காரியம். தர்ம சாஸ்திரம் இதைஏற்காது!" என்று. ஆனால் கோபிநாத் அதுபோல்கூறினாரா? இல்லை! துரோகம் செய்யக் கூடாது என்ற எண்ணம் இல்லை. ஆரியாவர்த்தம்! ஆரிய சிரேஷ்டர்! சனாதனம்! எனும் சொற்களின் சுவையை ரசித்தார், பீஜபூர் சுல்தானைக் காட்டிக்கொடுக்க இசைந்தார்! வந்தது தூதுவனாக, ஒப்புக்கொண்டதோ,துரோகியாவதற்கு! எவ்வளவுநேரம், கோபிநாத் பண்டிட்ஜியின் மனதிலே போராட்டம் இருந்ததோ நாம் அறியோம்; துரோகி என்று, உலகு எதிர்காலத்திலேனும் தூற்றுமோ என்று துளியாவது அச்சம் பிறந்ததோ அறியோம். பக்தனின் தாபத்தைப் பெற்றுப்பரவசமடைந்த பண்டிட்ஜி, பழிபாபம், எதையும் கருதாமல், எந்த பீஜபூர் சமஸ்தானத்தால் வளர்க்கப்பட்டாரோ, அதே அரசுக்குத் 'துரோகியாக' இசைந்தார். கோபிநாதர், சாமான்யரா? பண்டிட்ஜீ! வேதபுராண இதிகாசம் தெரிந்தவர்! அதாவது, நயவஞ்சகம், அடுத்துக் கெடுத்தல், அணைத்து அழித்தல், கொஞ்சி நஞ்சுதருவது போன்ற முறைகளை ஏராளமாகக் கூறும் ஏடுகளைநன்கு அறிந்தவர். பாரதத்திலே, திருதராஷ்டிரன், எதிரியை அணைத்துஅழிப்பது பற்றிப் படித்திருக்கிறார்! சூரியனையே சக்ராயுதத்தால் மறைத்துப் பொழுது சாய்ந்ததாகக் காட்டி எதிரியைக்கொல்ல, அர்ஜுனனுக்கு உதவிசெய்த கண்ணன் காட்டும் வழியை அறிந்தவர்கோபிநாத்! பாரதம், போதாதா, எதிரியை அழிக்க, "தர்மாதர்மம்" பார்க்க வேண்டிய அவசியமில்லை என்ற ஆரியமார்க்கத்தை எடுத்துரைக்க. கோபிநாதருக்கு மட்டுமல்ல, சிவாஜிக்கும் தெரியும் பாரத—இராமாயணக்கதை. பூஜைக்குரிய இராமன் மரத்தின் பின்புறமிருந்து அம்பு எய்தி வாலியைக்கொன்றகதையை பக்திச்சிரத்தையோடு பாராயணம் செய்ததும், அதைக்கேட்டு ஆனந்தித்ததும், வீண்போகுமா? இப்படிப்பட்ட சமயத்திலே, அந்த இதிகாசங்களிலே தெரிந்து கொண்ட 'முறைகள்' பயன் படவில்லையானால், அவைகளைப் படித்துத்தான் பயன் என்ன! கோபிநாத பண்டிட் சிவாஜிக்கு, அப்சல்கானின் படையை முறியடிக்க, இன்னயாகம் செய், அதனால் இன்ன அஸ்திரம் கிடைக்கும், என்று யோசனை கூறினாரா? இல்லை! இன்ன தெய்வத்தை உபாசனைசெய், இந்தமந்திரத்தை ஜெபித்து விட்டுப்போருக்குக்கிளம்பு, என்று உபதேசம் செய்தாரா? அவர் 'குரு'வாக அமரவில்லை, பீஜபூர் குடிகெடுக்கும் துரோகியானார். அப்சல்கானுடன் போர் வேண்டாம்—பணிவதாகச் சொல்லி அனுப்பு பாவனைக்கு—அப்சல்கானிடம் நேரடியாகப் பணியத்தீர்மானித்திருப்பதாகச்செய்தி அனுப்பு—தனியாக அப்சல்கான் இங்கே விஜயம் செய்யட்டும்,நான் அவரிடம்,சரண்புகுந்துவிடுகிறேன்—சமர் வேண்டாம்,—என்று அப்சல் கானிடம் தூதுஅனுப்புஎன்று யோசனை கூறினார் பண்டிட்கோபிநாத்—பண்டிட்? — இல்லை—பாதகன்!

* * *

"அப்சல்கான் வருவானா?"

"அனுப்பிவைக்கிறேன். அதாவது, அவன் இங்கேதனியாக வரும்படி நான்செய்கிறேன்"

"வந்தபிறகு...............?"

"வந்தபிறகு! மராட்டியத்தை, உன்மண்டலத்தை,உன்எதிர்காலத்தைக் கருக்கக்கூடிய எதிரி, துணையின்றித்தனியாக வருகிறான் உன்னைச்சந்திக்க! வந்தபிறகு............... என்றுஎன்னைக்கேட்கிறாயே, வகைகெட்ட..............."

"அறிந்தேன் ஆரிய! ஆனால் அப்சல், ஆயுதபாணியாகத்தானே வருவான்."

"பைத்யக்காரா! அப்சல்கான், அஞ்சிஅடிபணியக்காத்துக்கொண்டிருக்கும் சிவாஜிக்குத் தஞ்சமளிக்கவன்றோ இங்கே வருவான்—நிராயுதபாணியாகவே வருவான்—அவ்விதம் ஏற்பாடு நடக்கும்."

"பண்டிட்ஜீ! தங்கள் பாதாரவிந்தம்..............."

கோபிநாத்பண்டிட்டின் சதியாலோசனையே, சிவாஜியைத்தனியாகக்காண, அப்சல்கான் வருவது என்ற ஏற்பாட்டைஉருவாக்கிற்று! வீரச்சிவாஜிக்கு, வாள் ஏந்தத்தெரிந்த அளவுக்குவஞ்சனைவீசத்தெரிந்திருக்கமுடியாது, வேதியகுலத்தவராம் கோபிநாத் பண்டிதர், அந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டார், பரம்பரைப் பழக்கத்தின்படி!! சிவாஜி, மகத்தானதோர் 'ராஜதந்திர' வெற்றிபெற்றதாகச் சந்தோஷித்தான்; பண்டிட் கோபிநாத், மராட்டியத்தை ஆரிய சேவா பீடமாக்கிவிட்டதாக எண்ணிமகிழ்ந்தான். அப்சல்கானோ, திறமைமிகுந்ததூதுவர்,திரும்பிவருவார், சீறிப்போரிட்ட சிவாஜியின் சரணாகதிச் செய்தியைத் தூக்கிக்கொண்டு, என்று எண்ணிச்சாய்ந்திருந்தான். கோபிநாத் பண்டிட்ஜி வந்துசேர்ந்தார்— அப்சல்கானின் கொலைக்கான ஏற்பாடு செய்துவைத்துவிட்டு! அப்சல், படை அறிவான், போர் அறிவான், பாதகம், சதி, பசப்பு இவைகளைத் தாங்கி நடமாடும் மனித உருவங்கள் தன்பக்கத்தில் இருப்பதை எங்ஙனம் அறிவான்!

(7-ம் பக்கம் பார்க்க)



ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், தட்டல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கி மலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

அற்புத சஞ்சீவி.

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.
வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

எமது சோல் ஏஜண்ட்:—
M. E அப்துல் ரகிமான் சாகிபு, புகையிலை வியாபாரம்.
பெரிய கடைவீதி, திருவண்ணாமலை.

பட்டினிப் பட்டாளமும் பூஜாரிக் கூட்டமும்

:(o):

சோவியத் நாட்டிலே புதுமை உதயமான காட்சி

:o:

சமயத்திலே உயிரைவைத்து அதிலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்தவர்கள் நமது கண்ணின் முன்னால் எப்படியிருக்கிறார்கள் என்பதை ஆலோசித்துப் பாருங்கள்: மடாதிபதிகளாக ஆசை கொண்ட குட்டி மடாதிபதிகள் மடாதிபதிகளின் மென்னியை அமுத்தியேனும் அந்தப் போகத்தை அனுபவிக்க நினைக்கிறார்கள் என்பதற்கான கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். மடங்களில் பல வக்கீல்களுக்கும் சாட்சிகளுக்கும் ஏராளமான பணத்தைச் செலவு செய்துகொண்டு உத்தியோகஸ்தர்களுக்கு விருந்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். மடாதிபதிகளும் மகந்துக்களும், பெருமாளும் பிரசாதமும் பலனற்றவை என்றும் பலபாவங்களைத் தீர்க்கும் அவர் தீர்த்தம் உருசியற்றதென்றும் தள்ளியும், அர்ச்சகர்கள் அசுத்தர்கள் என்றும், பாகவதர்களுக்கு உபசாரணை தெரியாதென்றும் தள்ளிவிட்டு ஆப்பிள், ஆரஞ்சு, ஐஸ் சோடா முதலியவற்றால் ஆனந்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். குருக்கள் கும்பாபிஷேகத்தில் உயிர் வைத்துக்கொண்டு செட்டியார் வரவை எதிர்பார்த்துச் சுவாமியைத் தினம் அசைத்துக்கொண்டேஇருக்கிறார்கள். சமயத்தைக்காப்பாற்றும் புரோகிதர்களோ எந்தப்பணக்காரன் வீட்டில் நமக்கு ஒருபசுதானம் கிடைக்கும் என்கிற கவலையிலேயே இருக்கிறார்கள். சமயத்திலே உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக் கட்டளே உண்டுபண்ணின பார்ப்பனர்களில் சிலர் குதிரைப்பந்தயம் பார்க்க, நீலகிரிக்குப்போய் விடுகிறார்கள். லீவ் சமயமானதினால் பெரியமனுஷர்களைப்பார்த்துவரச்சிலர் சென்று விடுகிறார்கள். உத்தியோகம், பள்ளிக்கூடம் முதலியவைகளில்போய்ச் சேருவதற்கு வேண்டிய அருகதையைத்தேடிக்கொண்டிருக்கிறார்கள் பலர். கலியாணம் கல்லெடுப்பு, கருமாந்திரம் இன்னும் பல நன்மை தீமைகள் இவை யார் வீட்டில், எந்தக்கிராமத்தில் என்று விசாரித்துக்கொண்டும் அநேகர் இருக்கிறார்கள். இதுவுமல்லாமல் வருணாசிரம சபைக்கும் சனாதன தரும சமயத்துக்கும் பிராமண சபைக்கும் தலைவர்களாயிருப்பவர்கள் எல்லா ஆசைகளையும்விட்டுச்சன்னியாசம் அடையும் வயது வந்தும் வக்கீல் வேலையை விடாமல்வருகிற பணத்தை யெல்லாம் அள்ளிப் போட்டுக்கொண்டு உலக சுகங்களையெல்லாம் அனுபவித்துக்கொண்டு, பிராமணன் இங்லீஷ் படிக்கக்கூடாது, பழையவேதங்களையே படித்துப் பழைய அந்தஸ்தை அடையவேண்டும் என்று உபதேசம் செய்கிறார்கள்.

நமது பண்டிதர்களோ புராணப் பிரசங்கம் ஒழிந்துபோகுமே என்னும் அச்சத்தினால் அங்குமிங்கும் அலைந்தும் எழுதிக்கொண்டுமிருக்கிறார்கள். இவ்வளவு கிலேமையிலிருக்கிறது சமயத்தில் உயிர்வைத்துக்கொண்டிருப்பவர்களின்லட்சணம். என்று, கைவல்யம் எழுதுகிறார். இங்கு இன்றுள்ள, சமயாச்சாரிகளின் வாழ்க்கையைச் சரியானபடி படம்பிடித்துக்காட்டுகிறார். இப்படி மக்கள் சமுதாயத்திலேசமயத்தின் பெயர் கூறிக்கொண்டு ஒரு சிறு கூட்டம் வாழ்ந்து, மக்களின்வாழ்வைவதைத்து வருவதைக் கண்டிப்பது எப்படித்தவறான காரியமாகும். இதுபோன்ற நிலைமையிலே இருந்தநாடுகளிலெல்லாம், சமயத்தின்பெயரால் நடத்தப்பட்டகொடுமைகளை மக்களிடம் எடுத்துக்கூறி, தெளிவுஉண்டாக்கி, புதுமையில் ஆர்வம்பிறக்கச்செய்து, புரட்சியை ஏற்படுத்த அறிஞர்கள் அஞ்சியதில்லை. சோவியத் ரஷியாவிலேஇந்தத்துறையிலே சோர்விலாதுஉழைத்தேவெற்றிபெற்றனர். பட்டினிப் பட்டாளத்துக்கும் பூஜாரிக்கூட்டத்துக்கும் நடைபெற்ற பலமான போராட்டமே சோவியத் புரட்சி. சோவியத் நாட்டிலே புதுமை உதயமான காட்சியை நினைவிலே கொண்டுவரும்போதெல்லாம், சமயாச்சாரிகள் என்பவர்களால் சமுதாயம் சீரழிகிறதுஎன்பதைக்கண்டுபிடித்தமுதல்வேலை, வெற்றிகரமாக நடந்தேறியதாலேயே, பொருளாதார அடிப்படையையும், அரசாட்சியின் தன்மையையும், பிறகுமாற்றி அமைக்கமுடிந்தது என்பது தெளிவாகும். இன்று இங்கு இருக்கும் நிலையே ரஷியாவிலே அன்று இருந்தது. அதுமாறினதாலேயே அங்கு பிறகு மக்கள் வாழ்வு, மலர்ந்தது. எங்ஙனம்?

ருஷியமதஆச்சாரிகள்மிகப்பழைய காலக்கொள்கைக்காரர்கள். ருஷிய அரசன் கொடுங்கோன்மையில் கொள்ளை அடித்ததுபோல் மத ஆச்சாரிகளும்மக்களிடம்கொள்ளை அடித்தார்கள். மத குருக்களுக்கு பாமர மக்களிடம்தான் அதிகசெல்வாக்கு இருந்தது. அதைநிலைநிறுத்த பாமர மக்களை படிக்க விடாமலும் ஆராய்ச்சியில் அறிவைச் செலுத்த விடாமலும் மதக்குருக்கள் தடுத்துக்கொண்டே வந்தார்கள். இதன் பயனாய் ருஷிய பாமரமக்கள்மிக்க மூடநம்பிக்கைக்காரர்களாய்இருந்தார்கள். சந்நியாசிகளிடமும், எலும்புகளிடமும் மந்திரங்கள்மாயங்கள், இயற்கைக்குமீறின அதிசயங்கள் ஆகியவைகளிடத்தில்அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கையும்பக்தி விசுவாசமும் உண்டு. இதைஇந்தப்படி நம்பும்படி செய்வதே மதஆச்சாரிகளின் வேலையாய் இருந்தது. வயல்களில் புண்ணிய தீர்த்தத்தை தெளித்தால் பயிர்கள் செழித்து விளைந்துவிடும் என்று கருதி இருந்தார்கள். நோயாளி தலையில் புண்ணியதீர்த்தம் தெளித்தால் காயலா சௌகரியமாகிவிடும் என்று நம்பி இருந்தார்கள்.

தீவிரவாதிகள்

தீவிரவாதிகள், அதிர்ஷ்டமென்பதையும் மற்றும் தெய்வீகம் என்பதையும் எல்லாம் பொய்யாக்கினார்கள். விஞ்ஞானபூதபௌதீகமுறைப்படி ஒவ்வொரு காரியத்தையும் மெய்ப்பித்துக்காட்டினார்கள்.

மதத்திற்கும், அரசாங்கத்திற்கும் சம்பந்தமில்லாதாக்கினார்கள். மதப்படி செய்யும் கலியாணங்கள் முதலியசட்டங்கள்சட்டப்படிநிராகரிக்கப்பட்டன.

18 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கு மதபோதனை செய்யக்கூடாதென்று சட்டம் செய்தார்கள்.

பள்ளிக்கூடங்கள் முழுவதும் சர்க்கார் பள்ளிக்கூடங்களாயின. அப்பள்ளிக்கூடங்களில்மதப்படிப் புகள்கூடாதென்று திட்டம் செய்தார்கள்.

மதவிஷயங்களில் அவரவர்கள் மனச்சாட்சிப்படி நடக்கச்சுதந்திரம் கொடுக்கப்பட்டது. வைதீக மதத்தால்நசுக்கப்பட்டவர்கள்எல்லாம் தலைதூக்கி நடக்க வசதி ஏற்பட்டது.

ஆலய சொத்துக்கள் பற்றியும், மடசொத்துக்கள்பற்றியும், சட்டம் ஏற்படுத்தி அவைகளைக் கைப்பற்றியும், தனிப்பட்டவர்கள் சொத்துக்கள் பற்றியும் சட்டமேற்படுத்தி தேவைக்குமிஞ்சியசொத்துக்களைக் கைப்பற்றியும் அவைகளை நாட்டின் நன்மைக்கவசியமான காரியத்திற்குச்செலவுசெய்தும் வருகிறார்கள். கோவில் கட்டிடங்கள் முழுவதும் முனிசிபாலிட்டிக்குச் சொந்தமாக்கிவிட்டார்கள். பிரார்த்தனைசெய்ய விரும்புவோர்கள் முனிசிபாலிட்டியாரது அனுமதிபெற்றால்தான்கோவிலுக்குள்விடப்படுவார்கள். பரம்பரையாகக்கோவில் சொத்தைஅனுபவித்துக்கொண்டு கோவிலின் பேரால் ஆதிக்கம்செலுத்திவந்தவர்களுக்குப் பொதுவுடைமை மதக்காரர்களின் செய்கை பொறுக்க முடியவில்லை. இந்தக்கூட்டத்தார் பாமர மக்களை பொதுவுடைமைக் காரர்கள்மீது ஏவிவிட பல்வேறு வகையாலும் முயற்சி செய்தார்கள். கெட்டஎண்ணம் கற்பித்தார்கள். அவர்களை அரக்கர்கள் என்றார்கள். பொதுவுடைமை அரக்கர்களால் உலகம் நாசமாகிவிடும்என்றார்கள்.

பணக்காரர்கள் எல்லாம் வைதீகர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். இருவர்களும் சேர்ந்து எதிர்த்துப்பார்த்தார்கள். முடிவில்பொதுவுடைமையும், சமதர்மமுமேவெற்றி பெற்றது. பொதுவுடைமை சர்க்கார் கடைசியாகச் சிலமடாதிபதிகளையும், மதக்குருக்களையும் தேசப்பிரஷ்டம் செய்தார்கள். பல குருக்கள்மார்களின் தலையைவெட்டினார்கள். பொதுஜனங்களின்நன்மைக்குவிரோதமில்லாததும்சமாதானத்திற்குப்பங்கமில்லாததும்பொதுஉடைமை சர்க்கார் கொள்கைக்கு விரோதமில்லாததுமானமத அனுஷ்டானத்தை யார் அனுசரிப்பதைப் பற்றியும் சர்க்காருக்குக் கவலை இல்லை என்று விளம்பரம் செய்துவிட்டார்கள். இதுசமயம் ருஷ்யாவில்கோவில்களுக்குப் பணம் இல்லாததாலும்மதகுருக்களுக்குவரும்படிக்குமார்க்கமில்லாததாலும்இப்போது அங்கு கோவில், மதம், என்பனபோன்ற பேச்சுக்கள் மிகவும் அடங்கிவிட்டன.

1921-ம் வருடத்தில்ருஷ்யாவில் பஞ்சம் வந்தகாலத்தில் ஜனங்கள் பட்டினியால் மடிவதைப் பார்த்த பொதுவுடைமைக்காரர்கள் கோவில்களில்தூசிபடர்ந்துதுருப்பிடித்துக்கிடந்து வைரம், கெம்பு, வைடூரியம் முதலிய ரத்தினக்குவியல்களையும், வெள்ளி உலோகங்களையும் கொடுக்கும்படி கோவில்நிர்வாகிகளைக்கேட்டார்கள். அவர்கள்கொடுக்கமாட்டோமென்றுமறுத்ததுடன் "ஒபக்தர்களே! கோவில் சொத்து பறிபோகிறது காப்பாற்றுங்கள்" என்று ஓலமிட்டார்கள். இதற்குள் சர்க்கார்படை வந்தது! சர்க்கார் படைக்கும் பக்தர்களுக்கும்போர் நடந்தது. இந்தச்சந்தர்ப்பத்தில் சில பாதிரிகள் நகைகளைத் திருடிக்கொண்டுபோனார்கள்.

பிறகு சர்க்கார் அவர்களை ஜெயித்து வழிமறித்து நகைகளைக்கைப் பற்றி அவைகளுக்குத்தானியங்கள் வாங்கி ஏழைகளுக்கு உதவி, பஞ்சத்தைத் தணித்தார்கள்.

"முல்லை"

தமிழகத்திலே, செந்தமிழ்ப்பூங்காவைக் காணவிழையும் ஒருஇளைஞரின், முயற்சி "முல்லை." திங்கள்இதழ். தனவணிகருக்கும் நர்மத்துக்கும் இருந்துவந்த தலைமுறைமாறி, தமிழுக்கும் தனவணிகருக்கும் தொடர்புஏற்பட்டுள்ள இந்நாளில் அந்நாட்டு இளைஞருக்கெல்லாம் இனிய தமிழ்மணம் நுகரப்பேரவா. நண்பர்முத்தையா, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய, ஆதரவுடன், இந்தஇதழினைத்தமிழகத்துக்குத்தந்துள்ளார். கண்கவர்வனப்பு. அனுபவிக்கத்தக்கமணம் கொண்டஇந்த இதழினைத் தமிழகம் வரவேற்கும் என்றுநம்புகிறோம். "முல்லை," பெயர்.—ஆனால்அதிலேமுறுவல்செய்யும் அல்லியும் தாமரையும்பிறவும்உண்டு; அறிஞர்பலரின் கருத்தோவியங்கள் உள்ளன. நண்பர் இதழைப்பூந்தோட்டமாக்குவது போற்றத்தக்கதே, ஆனால் "முல்லை" எந்தக் காளானும் முளைக்கக்கூடிய கொல்லையாகாதபடி, கொஞ்சம்வேலியும் அமைத்தல் நலம். கிடைக்குமிடம்முல்லைப்பதிப்பகம், பிராட்வேசென்னை. இதழ்விலைநான்கணா.

புகழேந்தி

28—12—45ல் புரட்சிக்கவிஞர் புதல்வி திருமதி கண்ணப்பர் சரசுவதி ஓர்ஆண் குழந்தை பெற்றெடுத்தார்கள். தாயும் சேயும் நலம். குழந்தைக்குப் புகழேந்தி என்று பெயரிட்டனர்.

தமிழர் தன்மதிப்புப் பாடல்கள்

(புதுவைச் சிவம் எழுதியது)

இது, சமுதாய ஊழல்களையும் மூடப்பழக்க வழக்கங்களையும் சாடித், தமிழர்க்குத் தன்மான உணர்ச்சியையும் தொழிலாளர்க்கு எழுச்சியையும் உண்டுபண்ணுவது. பாடல்கள், எளிய இனிய மெட்டுக்களில் அமைந்தவை.

விலை அணா 6.

7-அணாஸ்டாம்பு அனுப்பினால், ஒருபுத்தகம்புக்போஸ்டில் அனுப்பி வைக்கப்படும். ஏஜண்டுகட்கு 100-க்கு 25 கமிஷன் தரப்படும். தேவைக்கு எழுதுக.

கிடைக்குமிடம்:—

"ஞாயிறு நூற்பதிப்பகம்"
28-அம்பலத்தாடு ஐயர் மடத்துத் தெரு,
பாண்டிச்சேரி. (F. I.)

சமயமெனும் தூளையிலே தமிழ்நட்டால் முளைக்காது!

திராவிட நாடு

காஞ்சி 20—1—46 ஞாயிறு

அறிவுரைக் கொத்து

பக்தகோடிகளின்கூட்டத்தைப் பார்! பாணவேடிக்கையைப் பார்! இரவைப் பகலாக்கும் விளக்குவரிசையைப்பார்! சிங்கவாகனத்தைப் பார்! அது செம்பொன்னுல்சமைக்கப்பட்டிருக்கிறது, அதன்மீதுள்ள அழகியசிங்காதருக்குள்ள ஆபரணச்சுமையைப்பார்!—என்று திருவிழாவின்போது, பவனிவரும்காட்சியில் சொக்கியவர்கள்பேசிக்கொள்வர். அவர்களின் கண்ணையும் கருத்தையும் இழுத்த இக்காட்சியிலே, அவர்கள் கண்டும் கருத்திலே கொள்ளாதுவிடுவது ஒன்று உண்டு! இவ்வளவும் காண்பார், பேசுவர், களிப்பார், கைகூப்பித்தொழுவர், இன்னென்னும் காண்பர்; ஆனல் அதனைக்கருத்திலே கொள்ளார், கொண்டிடினே கண்கலங்காதிருக்கமுடியாது! அண்டசாராசரங்களை நடத்திச்செல்லும்ஐயனை, வாகனமீதுவற்றித், தூக்கிச்செல்வர் சிலர், தமது தோள்நோக, மார்பு ஒடிய, கைகால் அலுக்க, வியர்வை பொழிய. பக்தகோடிகளின்கண்களிலே, பட்டுப்பட்டாடை அணிந்துகொண்டு, பதக்கம் கிரீடம் தரித்துக்கொண்டு, தங்கத்தால் செய்த சிங்காதனத்தின்மீது சவாரி செய்யும் "சுவாமி" தரிசனத்துக்குரியவராகத்தோன்றுமேயன்றி, தம்மை பொத்த மனிதர்கள், சோற்றுக்காக, மிகக்குறைந்தபணம் பெறுவதற்கும்சம்மதித்து, அந்தப்பெரும் பாரத்தைச்சுமந்து செல்வது தெரிவதில்லை. தெரிந்தால், அந்தப்பொழியும் வியர்வை, வலியால் எழும்ஒலி, பெருங்கூச்சல், ஆகியவைகண்டு, கண்ணீர்பெருக்குவர். ஏழையின் தோள்மீதுவற்றிவைக்கப்படுகிறது பெரியதோர் பாரம்; பக்தர்களின் கண்குளிரவேண்டும்என்றுபோலும்! ஆரவாரத்திலும் பகட்டிலும் மனதைப் பறிகொடுத்து விடுவதால், அவர்களின் கண்களிலே, தங்கள் பூஜைக்குரிய ஆண்டவனையே 'ஆளமூத்தி' ஆக்கிவைக்கிறகொடுமை படுவதில்லை. அதுவே, படாததால், அந்தச் 'சுவாமி'யைத்தூக்கிச்செல்வதுடன், பூஜாரிஒருவனையும் சேர்த்துத்தூக்கிச்செல்லும்கொடுமையும் அந்தப்பூஜாரியும், ஆரியகுலத்தவராக இருந்தே தீரும் அக்ரமத்தையும், அவர்கள் கண்ணல் காணபதன்றிக்கருத்திலே கொள்வதில்லை. வேறுயாரேனும், விளைவுபற்றிக்கருதாது, "பக்தரே! எதைஎதையோ கண்டுபூரிக்கிறீரே," இந்தத் "தூக்கிகளின்" தோள்வீக்கத்தைக் கண்டீரா? ஆண்டவனின் அழகுபற்றிப் பேசுகிறீரே, அவர் அருகே அமர்ந்திருக்கும் அருகதை ஆரியனுக்கே உண்டு என்னும் அக்ரமக்கொள்கையை, இங்கே உறுதிசெய்யும் செயலைக்கண்டீரா? அந்த ஆரியன், மேலே அமர்ந்துகொண்டு, பெரியதோர் வெற்றி வீரன், பெருமைக்குரியமன்னன், தன்னுடையபடையினரையும்பணியாட்களையும், பார்த்துப் பெருமை கொள்வதுபோல, நம்மைஎல்லாம் பார்க்கிற காட்சியின் உட்பொருளை உணர்ந்தீரோ? அவன் 'பூதேவன்' என்று ஏற்றுக்கொண்டீரே, அவன், மனிதகுணத்திலேயும் எவ்வளவோ மாற்றுக் குறைந்தவன் என்பதை அறிவீரா? வேதம்அறியான், வேள்விசெய்தறியான், ஆச்சாரம் அறியான், அக்ரமம் பல செய்து தேறியுள்ளான், அதனை அறிவீரா? என்று யாரேனும் துணிந்து பக்த குழாத்தினரைக் கேட்டபிறகுதான், அவர்களுக்குத், தாங்கள் காணும் காட்சியிலே, விட்டுப்போனபகுதி, முக்கியமான பகுதிஒன்றுஇருப்பதேதெரியவரும். அப்படித்தெரிந்துகொண்டவர்களிலே, நூற்றில் ஐம்பது பேர், தமது தோள்வலிக்காத காரணத்தால், கேட்டுமறப்பர்; மனிதத்தன்மைக்கு மதிப்பளிக்கவேண்டுமென்றநோக்கம்கொண்டமாண்பினர்மட்டுமே, 'ஆம்! எதைஎதையோ கண்டோம் களித்தோம், ஆனல் சூட்சமத்தைத்தான் இது காறும் காணது இருந்துவிட்டோம்; இப்போதுதான் அதனையும்கண்டு, புதுத்தெளிவு பெற்றேம்'' என்றுஅறிவுரை புகல்வர்.

பிரிட்டிஷ்பார்லிமெண்டரிதூதுக் கோஷ்டியினர், இந்தஇரண்டுவகையினரில், எப்பிரிவினரோ நாமறியோம். அவர்கள், காணுதகாட்சியோ, போகாதஇடமோ, காணேம். பெரியமனிதர்களிடம் பேசுகிருர்கள், பெரியநகரங்கள் மட்டுமல்ல, பட்டிக்காடுகளும் செல்கின்றனர், சர்க்கார் மாளிகை மட்டுமல்ல, ஏழையின் குடிசைக் குள்ளேயும் நுழைந்து பார்க்கின்றனர், அரசியல் கட்சித்தலைவர்களிடம் மட்டுமல்ல, ஆலமரத்தடியே நிற்கும்உழவனையும் கண்டுபேசுகின்றனர்! இவ்வளவுகாணும்இந்த அன்பர்கள், திருவிழாவிலே, பவனிசெய்யும் பரமனையும், அவருக்காக என்றுசொல்லிச் செய்யப்பட்டுள்ள படாடோபத்தையும், கண்டுகளித்துவிட்டு, அவரைச்சுமக்க "கூலிக்குஆள்" இருப்பதையும், மேலேஅவருடன்சரிசமமாகப், பிறப்புரிமைகாரணமாகஅமர்ந்திருக்கும் ஆரியனையும்காணமலிருப்பதுபோல, ''இந்திய உபகண்டத்திலே' திருவிழாக் காட்சிகளை மட்டும்கண்டு, சூட்சமத்தை மட்டும் காணுதநிலையில் இருப்பரோ, சூட்சமத்தையும் காண்பரோநாமறியோம். இதுவரைஇங்குஅனுப்பப்பட்ட 'கோஷ்டிகள்' பலவும், திருவிழாக்காண்கிற திருக்கூட்டமானதேயன்றி, சூட்சமத்தைத்தெரிந்துகொண்டதாக ஆதாரம்காணேம். இவர்களும் இதுபோன்றேயாகிவிடக்கூடாதுஎன்று, லாகூர்த்தோழர்கள்சிலர், மதத்தின்பாரம் தமிழன்மீது அழுத்துவதும் மதத்தால் மேல்நிலை ஆரியனுக்கே உண்டாவதுமாகிய உண்மையை பக்தனுக்குப் பகுத்தறிவாளன் எடுத்துக்காட்டுவதுபோல, பார்லிமெண்டரிதூதுக்கோஷ்டியினருக்குஅவர்கள் எடுத்துக்கூறியுள்ளனர், அதாவது சூட்சமத்தைக் காட்டியிருக்கிருர்கள்.

"இந்து சமுதாயத்திலுள்ள ஜாதி முறைதான், இந்திய அரசியல் அல்லலுக்கு அடிப்படையான காரணம். முஸ்லிம் லீக் பாகிஸ்தான் கேட்பதும், சென்னை பார்ப்பனரல்லாதார் திராவிடஸ்தான்கேட்பதும், தீண்டாதார்தனித்தொகுதி கேட்பதும், உயர் ஜாதி இந்துக்களேன்போர், முஸ்லிம்களையும், சூத்திரர்களையும், சமுதாயத்துறையிலே (கொடுமை) பகிஷ்கரித்துவந்ததன்விளைவேயாகும். ஜாதி ஒழிக்கப்பட்டாலொழிய இந்தியாவிலே, எந்த ஏற்பாடும் நிலைக்கமுடியாது" என்று, லாகூர்ஜட்—பட்—டோரக் மண்டல், பார்லிமெண்டரி கோஷ்டியினருக்கு ஒரு மகஜர் மூலம் தெரிவித்ததாக, ஜனவரி12ந் தேதியலாகூர்ச் செய்திகூறுகிறது.

ஜட்—பட்—டோரக் மண்டல், என்றல் ஜாதி ஒழிப்புச் சங்கம் என்று பொருள். இந்தச் சங்கம் சுமார் 15ஆண்டுகளாகவே ஜாதிச்சனியனலேயே, இந்தியா சீரழிந்தது என்ற கருத்தைக்கூறி வருவதுடன், நமது சுயமரியாதைச் சங்கம் போலவே, ஜாதியின் பேராலும் இந்துமதத்தின் பேராலும் நடைபெறும்பல கொடுமைகளைப் பாமர மக்களிடம் விளக்கிவரும் பணிபுரிந்து வந்திருக்கிறது. நாலு ஆண்டுகளுக்கு முன்பு கூட ஒரு முறை பெரியார், இந்தக் கழகத்தாரால்அழைக்கப்பட்டுலாகூர், கல்கத்தா, முதலியபலஇடங்களுக்குச் சென்று, சுயமரியாதைப் பிரச்சாரம்புரிந்துவந்தார். ஆகவே, ஜட்-பட்-டோரக் மண்டலத்தார், இந்திய நிலைமையின் சூட்சமத்தை நன்கு அறிந்தவர்கள், அறிந்தவர்கள்மட்டுமல்ல, ஆர்ப்பாட்டக்காரர்கள்இந்த முக்கியமான விஷயத்தை மற்றவர்கள் தெரிந்து கொள்ளாதிருக்க வேண்டியே, பல சூதானமுறைகளைச் செய்கிருர்கள் என்பதையும், வெளிநாட்டவர் இங்கு வந்தால், மிகஎளிதாக ஆர்ப்பாட்டக்காரரின் விழாவிலே, மனதைப்பறிகொடுத்துவிட்டுச், சூட்சமத்தைக்கவனிக்காமலேயே போய்விடுகிருர்கள் என்பதையும் நன்கு உணர்ந்தவர்கள். ஆகவேதான், மேற்படிகழகத்தார், சூட்சமத்தை, எடுத்துக்காட்டினுர்கள். அவர்கள்கூறிய இந்தஅறவுரை ஆங்கிலத் தோழர்களின் மனதிலே பதியுமா? பதிந்தாலும், அதனைவெளிப்படையாகக்கூறத்தைரியம் பிறக்குமா? அதற்கு ஆவன செய்ய வேண்டும்என்றநேர்மையும்நெஞ்சுஉரமும்ஏற்படுமா? நாம்நம்பமுடியவில்லை! அவர்களின்பேச்சும்போக்கும், நமக்கு அந்தநம்பிக்கையைத் தரவில்லை. அவர்கள், திருவிழாபார்க்கவரும் கூட்டம்போன்று இருக்கின்றனரேயொழிய, உண்மையைத் தெரிந்துகொள்ள உள்ளத்திலே ஆவல்கொண்டவர்களாகத் தெரியக்காணேம். அவர்களின் போக்குஎப்படியோ போகட்டும், நமது லாகூர்த்தோழர்கள், கடமையைத் திறமையாகச் செய்துவிட்டனர், உண்மையைத்தைரியமாகஉரைத்தனர், என்பதற்காக நாம்மிகமகிழ்ந்து, மேற்படி மண்டலத்தாரை மனமார வாழ்த்துகிறேம். அவர்கள், பார்லிமெண்டரிதூதுக்கோஷ்டியினருக்குத்தந்த மகஜரிலே, பல விஷயங்களைக் குறிப்பிட்டுவிட்டுப், பாகிஸ்தான்தந்துவிட்டால் இந்தக் குறைபாடுகள் ஒழிந்துவிடும்என்று கூறிவிடமுடியாது, குறைபாடுகளை ஒழிக்கவழி, ஜாதியை ஒழிப்பது தான் என்று கூறினராம். "ஜாதி ஒழிப்பை" மேற்படி கழகம், இலட்சியமாகக்கொண்டது, அதுஓர் அரசியல்கட்சியல்ல. ஆகவேதான், பாகிஸ்தான் விஷயமாகக் கொஞ்சம் தவருன கருத்தை வெளியிட்டிருக்கிறது என்று கருதுகிறேம். ஜட்—பட்—டோரக் மண்டலத்தின் அரசியல்கருத்துப்பற்றிக்கவனிக்க அவசியமில்லை, ஏனெனில், அது அரசியல் ஸ்தாபனமல்லசமூகவிஷயமாகஜட்—பட்—டோரக் மண்டல் வெளியிட்டுள்ளகருத்தைநாம்முழுமனதுடன் ஆதரிக்கிறேம். ஜாதிப்பிரச்சனையைப்புரிந்துகொண்டு, அந்தச்சிக்கலை அறுக்கத்துணிவு கொள்ளாதவரையிலே, தூதுக்கோஷ்டிகள் மாறி மாறி வந்தும் பயன் இல்லைஎன்பதை வலியுறுத்துகிறேம். பார்லிமெண்டரிதூதுக்கோஷ்டியினர், லாகூர்ச் சுயமரியாதைக்காரர்கள் அளித்த அறிவுரைக்கொத்துமூலம், தெளிவு பெறுவராக.

பகுத்தறிவுப் படக்காட்சி

பகுத்தறிவு ஊட்டவும், ஆரியமத சமுதாயப்புரட்டுகளை விளக்கவும், காஞ்சி, திராவிடர்கழகத்தார் தயாரித்த ஓவியங்கள், ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசிக்காக அமைக்கப்பட்டிருந்த கண்காட்சிக்கொட்டகையில்பத்துநாட்களுக்குமேலாகக் காட்சிக்காக வைக்கப்பட்டன. ஏராளமானமக்கள்மேற்படிபகுத்தறிவு படக்காட்சியைக்கண்டும், திருச்சி, பொன்மலை, ஸ்ரீரங்கம்திராவிடர்கழகத்தோழர்கள் படங்களைப்பற்றிய விளக்கஉரைகள் தந்தது கேட்டும் பயன்பெற்றனர்.

நாடும் நலமும்

★

காஞ்சிபுரம் திராவிடர் கழகத்தினர், பொங்கற்புத்தாண்டுவிழாவை 14—1—46 முதல் 18-1-46 வரை ஐந்து நாட்கள் கொண்டாடினர். முதல் நாள்விழாக் காஞ்சிபங்கிட்டு அலுவலர் தோழர் கி. இராமலிங்கனர் அவர்கள் தலைமையில் மாணவர்கள் சொற்போர்ப்போட்டிநிகழ்த்தித் திறமையுடையோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இரண்டாம் நாள், ஈழத்தடிகள் தலைமையில், தோழியர் குஞ்சிதம் அம்மையார் பி. ஏ., எல். டி., அவர்களும் தோழர் குருசாமி பி. ஏ., அவர்களும்; மூன்றும் நாள், காஞ்சிநகரமன்றஆணையாளர் தோழர் கதிர்வேலர் அவர்கள்தலைமையில்தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களும் புலவர் கோவிந்தன் அவர்களும்; நான்காம் நாள், காஞ்சி மின்பொறிநிலையத் தலைவர் தோழர் காசி வேலாயுதனர் அவர்கள் தலைமையில்; புலவர் சக்கரபாணி அவர்களும், புலவர் வேணுகோபாலர் அவர்களும்; ஐந்தாம் நாள்தோழர் அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் தோழர் சி.டி. நடராசன்எம். ஏ., பி.எல். அவர்களும் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினர்.

முதல் நாள் விழாவில் சொற்போரில் கலந்து உரையாடிய பச்சையப்பன்உயர்நிலைப்பள்ளிமாணவன், கண்ணன் "நாடும் நலமும்" என்ற பொருள்பற்றிப் பேசியதற்கு முதல்பரிசுவழங்கப்பட்டது. அச்சொற்பொழிவு கீழேதரப்படுகிறது. மற்றமாணவர்களின்சொற்பொழிவுகள் தோடர்ந்து வெளியிடப்படும்.

நாடு நலமுடனிருக்க மழைஇன்றியமையாதது. "மாரியல்லதுகாரியமில்லை" என்று நரைமூதாட்டி சொல்லிப்போந்தாள். ஆகவேமழை மிகமிக அவசியம் என்பது புலனுகின்றது. நாடு வறுமையுடன் இருந்தால் அங்கே நலம் காணமுடியாது. வளமில்லாத நாடு வறுமையுடன் இருந்தால் ஆச்சரியமில்லை. இங்குநீர்வளமும், நிலவளமும்குடிவளமும் குறைவில்லை, மக்கள் மனவளம் ஒன்றுதவிர. இங்கு வற்றுத உயிர் நதிகள், அவைகளால்வளர்க்கப்படும் வயல்கள், அவைகளில் விளையும் வகைவகையானமணிகள்! நஞ்சையும் புஞ்சையும் மிகுதி! நாடெங்கும் சாலைகள் சோலைகள்! மண்ணுக்கடியில் பொன்! கடலுக்குள்ளே முத்து! காட்டிலே சந்தனம்! இப்படி இயற்கைஎழிலுடன் விளங்கும் இந்நாட்டில் இன்று நலமில்லாமைக்குக் காரணம் என்ன? எங்கே நலம்? ஏன் இல்லை?

தமிழன், இன்று சொந்த நாட்டிலே சோறில்லாமல் சோகத்தோடு மனைவி மக்களைவிட்டுவெளிநாடு செல்கின்ருன், அடிமைத் தொழில் செய்ய!

இந்தநேரத்திலே, இந்தநாட்டில் பத்துலட்சம் ரூபாயில் ஆண்டவனுக்கு வைரமுடி! இந்த நேரத்தில் இந்தநாட்டில் கோயில்கட்டுதல்! இந்த நேரத்தில் இந்த நாட்டில் கும்பாபிஷேகம்!

இந்த நாட்டுக்கடவுள்உழைத்து அலுத்துவிட்டார் என்று எண்ணி அவருக்கு மக்கள் பத்துலட்சம் ரூபாயில் வைரமுடி கொடுத்தனர் போலும் பாவம்! என்னே இவர்களின் அறியாமை!

வைரமுடிகொடுப்பதையும், குடமுழுக்குச் செய்வதையும் கோயில்

(6-ம் பக்கம் பார்க்க)

அவரது சலிப்பும் இவரது விருப்பும்

—(போனார்ரான்)—

உலகத்தில் ஒத்தவயதிலும் ஏறக்குறைய விளம்பரத்திலும் ஒரேதன்மையிலுள்ளவர்கள் இருவர். ஒருவர் மேனாட்டார். ஒருவர் கீழ்நாட்டார். அவர்கள் ஜியார்ஜ் பர்னாட்ஷாவும், காந்தியாருமாகும். காந்தியாரை அவ்தார புருடராக நினைப்பவர்கள் பர்னாட்ஷாவை அறிவாளியாகக் கருதுகின்றனர். பர்னாட்ஷா மனித உள்ளம் படைத்தவரானால் காந்தியார் ஆத்மாவின் துணைக்கு அந்தராத்மாவின் துணையையனுதினமும் வேண்டிநிற்பவர். பர்னாட்ஷா பழமையில் புதுமைகண்டால் காந்தியார் புதுமையில் பழமை காண்கிறார். பர்னாட்ஷா போதும் இந்த வாழ்க்கை எனக்கூறினால் காந்தியார் என்க்கு மேலும் மேலும் வேண்டும் நான் விரும்பும் வரை (125-வயது) இந்த வாழ்க்கை என்கிறார். ஒருவருக்கு வாழ்க்கையில் சலிப்பு. மற்றொருவருக்கு வாழ்க்கையில் விருப்பு. ஒருவர் இயற்கையின் கூற்றுக்குப்பணிகிறேன் என்கிறார். மற்றொருவர் இயற்கையின் கூற்றை செயற்கையில் (அந்தராத்மா துணைகொண்டு) மாற்றுவேன்என்கிறார். நடக்குமா? பார்ப்போம்.

ஜியார்ஜ் பர்னாட்ஷா இங்கிலாந்தில் வசிப்பவர். அவருக்கு இப்பொழுதுவயது 90–நடந்துகொண்டிருக்கிறது. "சண்டே பிக்டோரியல்" என்னும்பத்திரிகையின்சந்தாதாராகயிருந்து வருகிறார். புத்தாண்டுக்குச் சந்தாவைப்புதுப்பிக்கும்படியாக அவ்ரைக் கேட்டதற்கு நான் 90 வது ஆண்டைக் கடந்து வருகிறேன். நீண்டகாலம் இருந்துவிட்டேன் இனி இருக்க விரும்புவதும் இரண்டே ஆண்டுகள் தான். ஆகையால் இரண்டாண்டுகள்வரை பத்திரிகையை அனுப்பி வையுங்கள் என்றார். இதைக்காட்டிலும் அதிகமாகநீடித்திருந்தாலும் தான் வாழ்க்கையில் எதிர்ப்பார்ப்பதும் ஒன்றுமில்லை என்றாராம். ஜியார்ஜ் பர்னாட்ஷாவின் உருவத்தைப்படத்தில்பார்த்தவர்கள் அவர் தன் நிலைமையை நன்குணர்ந்தே இவற்றைக் கூறியுள்ளாரென்றே கூறுவர்.

நமது நாட்டுக்காந்தியார் சென்ற சில மாதங்களாகத்தான் 125-வயது வரை இருக்கத் தீர்மானித்திருப்பதாகக் கூறிவருகிறார். இதற்கு அந்தராத்மாவின் அனுமதியும் கிடைத்துவிட்டதெனக் கூறமுன்வருவாரேயானால்கூட ஆச்சரியப்படக்கூடியவர்கள் குறைவுதான். காந்தியார் இவ்வாறு கூறுவதற்குக்காரணம்என்ன? காயகல்பம் சாப்பிட்டுவிட்டாரா? அல்லது உடற்கூறு சாத்திரத்தை நன்கு அறிந்து அதன்படி தனது நிலையை நன்குதெரிந்துகொண்டு விட்டாரா என்று பார்த்தாலும் அவ்வாறு ஒன்றுமில்லை என்றேஏற்படுகிறது. காந்தியாருக்கு வயது 75–க்கு மேலாகிறது. நடை நாளுக்கு நாள் தளருகிறது. நரம்பும் மெலிகிறது. அன்றாடஅலுவல்களுக்கு டாக்டர்களின் அனுமதி தேவையாகயிருக்கிறது. சீதோஷ்ணநிலைமையையனுசரித்துப்பிரயாணத்தைத் தவக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் 125-வயது வரை உயிருடனிருக்கத் தீர்மானித்து விட்டேன் எனக்கூறுவதின் மர்மம்தான் என்ன? அதுதான் வாழ்க்கையில் ஏற்பட்ட விருப்பு. இந்த விருப்பம் இன்னும் 25-ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருந்தால், கொந்தளிக்கும் இந்த அரசியலில் இறங்காமல் வேறோர் துறையில் வாழ்க்கையை அமைத்துக்கொண்டிருந்தால் இன்றுகட்டுடன் கூடிய உடலோடும் கல்லுடன்கூடியமனதோடும்இருக்கலாம். சுமார் 25-ஆண்டுகளாக அரசியல்உலகில் காந்தியார் தோல்விமேல்தோல்வியடைந்தார். தனது லட்சியம் கைகூடி வாராததாலேற்பட்ட கவலையோ அதிகம். தான் அரசியலில் பிரவேசித்தகாலத்திலிருந்த நிலைமையைவிட இன்றுள்ள நிலைமையோ மிகமோசம். இந்த நிலைமையில் பல்லாண்டுகள்இருக்க விரும்புவதும், அதன்படிதீர்மானித்துவிட்டதாகவும்கூறிக்கொண்டிருப்பதுபொருத்தமானதாகுமா என்பதைநேயர்கள் சிந்திக்கவேண்டும்.

காந்தியார் சேவாக் கிராமத்தைவிட்டு புறப்பட்டபோது ஒருவர் அவரைப்பார்க்க விரைந்து வந்தார். காந்தியாருக்கும் அவருக்கும் நடந்தசம்பாஷணையில் அவர் இந்தியத் தலைவர்களுக்கு நீண்ட ஆயுளையும் தனக்கு மட்டிலும்விரைவில்சாவையும் அளிக்கச் சதா கடவுளைப்பிரார்த்து வருவதாகக்கூறினார், அத்தகைய பிரார்த்தனை நேர்மையானதல்ல எனகாந்தியார் கூறினார். கடவுளின் வேலையைக் கருத்துடன் செய்ய நீண்ட ஆயுளையும் திடகாத்திரத்தையும் பெற ஒருவன் பிரார்த்திக்க வேண்டுமே தவிரச் சாவதற்குப் பிரார்த்திக்கக்கூடாது என்றும் கூறினார். அதற்கு அவ்வாலிபன் தேசபக்தி என்னும் விதைநன்றாக வேரூன்றிவளர வேண்டுமாயின் நம் உயிர் என்னும்தண்ணீரை அதற்கு நன்றாகவிடவேண்டும்என ஆத்திரத்துடன் பதிலளித்தான், இந்த முறையில்கடவுளின்பெயரை உச்சரிப்பதால் கடவுளை நிந்தித்தவர்களாவோம் எனக் காந்தியார் கூறியதையும் கேளாமலே வந்த மனிதன் சென்று விட்டான்.

இந்நிகழ்ச்சி அண்மையிலேயே நிகழ்ந்திருக்கிறது. காந்தியார் 125 ஆண்டல்ல 525 ஆண்டுவரை உயிருடனிருப்பதை வெறுப்பவர் ஒருவர் கூட இல்லை. இருக்கவேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பம். மனிதன் உலகத்தில் தோன்றியவுடன் விடும் மூச்சே அவனது கடைசி மூச்சின் ஆரம்பமாகும் என்பதை நன்குணர்ந்தவர்கள் நான் 125 ஆண்டுகள்வரை இருக்கத்தீர்மானித்து விட்டேன் எனக் கூறிவருவதைக்கண்டு ஆச்சரியப்படுவர்.

பிறப்பு

23—12—45ல் திண்டுக்கல் எஸ். முகம்மதுஸ்மாயில் அவர்களுக்கு ஆண்குழந்தை பிறந்ததன் நினைவாகத் "திராவிடநாடு" வளர்ச்சிக்கு 1-ரூபாய் தரப்பட்டது.

திறந்த மடல்

தோழர். காமராஜ் நாடார்,

த. நா. க. க. தலைவர், சென்னை.

ஆரிய நேசரே!

தாங்கள் தமிழ்த்திருநாள் பொங்கலன்று சென்னையில் சொற்பொழிவாற்றுகையில் அசாப் அலியின் சென்னைவருகையால் தங்களுக்குக் கிடைத்த "ஆரியநேசர்" பட்டத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டீர்கள். இதைக்கண்டு திராவிடர்மனம் புண்படாமலிருக்க முடியாது.

தங்கள் சொற்பொழிவை என்னதான் கடைந்தெடுத்துப்பார்த்தாலும்அடிமைத்தனம்வீசுகின்றதே தவிரப்,புரட்சிவாடை வீசவில்லை. உழைப்புக்குவந்தனம் செய்வோம் என்பதுதான் பொங்கல் விழாவின் முக்கியக்கருத்து என்று செப்பியுள்ளீர்கள். ஆனால் அதற்கு மேலிருக்கும் மற்றப் பகுதியைப் பாடத்தங்கள் மனம் துணிவுபெறவில்லையே, ஏன்? ஒருக்கால் அசாப்அலியின் பாணம் மீண்டும்தைத்தால்என்செய்வதுஎன்றபயம்போலும்.

தமிழர்கள், தமிழர்கள் என்றால்யார்? உணர்ச்சி, இனப்பற்று, நாட்டுப்பற்று, அதற்கேற்ற அறிவுத்திறமையுள்ள தமிழர்கள். உழைப்பிற்கு வந்தனை செய்வோம் என்பதை மட்டும் அன்று கூறியிருக்க மாட்டார்கள். உழைப்புக்கு வந்தனை செய்து செய்து தமிழர்கள் இளித்தவாயர்களானார்கள், இனிவந்தனை இல்லை அதற்குப் பதிலாக திராவிடநாட்டில் வீணில்உண்டு களித்திருப்போரை இங்கிருப்பவரை விரட்டி அடிப்போம் என்பது தான் இன்றுள்ளதமிழர்களின், பொங்கலன்று பரடவேண்டிய புரட்சிக்கீதமாகும். தங்கள் அருகில் ஆச்சாரியார்வீற்றிருக்க, பாவம்தங்களுக்குஎப்படித்தைரியம் பிறக்கும். சுயமரியாதை உணர்ச்சியுள்ளவர்கள் தாம் யாராயிருப்பினும், எந்த இடமாயிருப்பினும் உள்ளதை எவருக்கும் அஞ்சாமல் எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர்கள் என்பது அக்கூட்டத்தின் போக்கிலிருந்தே தெரியவருகின்றது. உங்களுக்குதான் பதவி பெரிது. ஆனால் தமிழனுக்கு மானம்தான் பெரிது. எனவே அவ்விததன்மானத்தை விரைவில் தாங்கள் பெற்றுத்தமிழ்நாட்டில் பரிதாபகரமாக விளங்காது, தவப்புதல்வராக விளங்கவேண்டுகிறேன்; அதுவும் அடுத்த பொங்கல் திருநாளுக்குள்!

கூந்தரசன்

●

திரு. வி. க. அவர்கள்,

சாதுஅச்சுக்கூடம், இராயப்பேட்டை.

சமரச சன்மார்க்க சீலரே!

தாங்கள் அரசியலிலிருந்து அஞ்ஞாதவாசம் செய்துவரும் இன்றைய நிலையில் திடீரென்று என்றாவது ஒருநாள் அரசியலில் தலையிட்டு விடுகின்றீர்கள்.ஐயோ சிவமே! உங்களுக்கு இன்னும் விட்டகுறை தொட்டகுறை விடவில்லைபோலும்.

பொங்கல் திருநாளில் கால்வீங்கும் படலத்தைப்பற்றிமட்டும் தாங்கள் திருவாய் மலர்ந்திருந்தவாய்பொத்தி அமர்ந்திருந்தால் தங்களின்பிறவிச்சொத்தாகிய வெண்டைக்காய்க்கொள்கைக்கு ஏற்றதாகயிருந்திருக்கும்,அதோடுநிற்காமல் "வடநாடு, தென்னாடு என்பதைப்பற்றிப் பேசுகையில்வடஇந்தியாவில்தான்வகுப்பு வித்தியாசம் என்றால் தமிழ்நாட்டிலுமா அந்தவித்தியாசம்பரவவேண்டும்? இதைப் பார்லிமெண்டு தூதுகோஷ்டிகள் கேள்விப்பட்டால் ஆட்சியை நம்மிடம் கொடாமல் அவர்கள் பிடியிலேயே வைத்துக் கொள்வார்கள்" என்றும் சண்டமாருதம் செய்தீர்கள்.

ஆனால் இந்தக்கூட்டத்தில்தான் தங்களின் நாவானது கூசாமல் பொய்சொல்லமுன்வந்துள்ளது. நா கூசாவிட்டாலும் தங்களது மனதாகிலும் தடுத்து இருக்கக்கூடாதா? ஆனால் அவ்விதமனம் தங்களுக்கு இருந்தால் இன்றையநிலையில் தாங்கள் அரசியலிலிருந்தும் மக்களுக்கு உண்மைத் தொண்டாற்றும் பணியாளராயிருந்தும் விலகி ஓடியிருப்பீர்களா?

தென்னாட்டில்வகுப்புச்சண்டைகிடையாது என்று சாதாரண அரசியல் அறிவு படைத்தவர்கள்கூட துணிந்துகூறமாட்டார்கள். அதுவும் தங்களின் மானத்தை நிலைநாட்டவே வகுப்பு உணர்ச்சி, அதாவது இனஎழுச்சி காஞ்சி மாநாட்டில், திராவிடநாட்டுத் தனிப்பெருந் தலைவர் பெரியார் அவர்களின் அரிய துணையினால் எழுப்பப்பட்டது. இதைத்தாங்கள் அறிந்தும், அறியாதவர்போல் பாசாங்கு செய்தால்கூட ஆரியக்கூட்டம் மறந்திருக்கவே முடியாது.

ஆகவேதங்களின்தன்மானத்தைக் காப்பாற்ற, பொதுவாகத் திராவிடர்களின் இனப்பண்பைப்பெறத்திக்கெட்டும்முரசு கொட்டித் தீப்பொறி பறக்கும் இன உணர்ச்சி, வகுப்புஉணர்ச்சி இந்நாட்டில் இல்லை யென்று மனமறிந்துபொய்கூறும் உங்களின் செயலை எதற்கு உவமைகாட்டுவது? மேலும் பார்லிமெண்ட் தூதுகோஷ்டி கையில் சுயராஜ்யத்தைக் கொண்டுவந்திருக்கிறதுபோலும்!எனவே நம்பிளவுகளைக் கண்டால் கொடுக்காமல் கொண்டுபோய் விடுவார்கள் என்றும் கூறினீர்கள்.என்னதானிருந்தாலும்தாங்கள் இவ்வளவுஅரசியல்அப்பாவிபோன்று ஆகிவிடுவீர் என்று யாரும் கருதியிருக்க மாட்டார்கள். பார்லிமெண்ட் தூதுகோஷ்டி சுயராஜ்யம் கொடுக்கவே வருகிறது என்று தாங்கள் பொதுமக்களிடம் கூற முன்வந்துள்ள இக்கட்டம்தான் தாங்கள் அரசியலில் பேசும்கடைசிக்கட்டம் என்று தமிழர் அன்று முடிவு கட்டிவிட்டார்கள். உபயதுல்லாக்கள்கூட இவ்வளவு அரசியலில் ஆராய்ச்சி இல்லாமல் இந்நாளில் பேசமாட்டார்கள். அந்த நிலைக்குத்தங்களின் அறிவுத்திறன் பரமபதம் பாம்பு விளையாட்டுமேல் பாதாளத்திற்குச்சென்று விட்டதைக்கண்டு தமிழர் கண்வடிக்காவிட்டாலும், தங்கள் அருஞ்சிவனார் அம்மையப்பர் கட்டாயம் மனம் நோவார் உங்களின் பொய்மையைக் கண்டு.

எது எப்படியிருந்தாலும், திராவிடநாட்டில் தோன்றியுள்ள இனஎழுச்சிப் போராட்டத்தைத் தங்களைப்போன்ற உறுதிதளர்ந்த சமரசப்பேர்வழிகளால் குலைத்துவிடமுடியாது. அதேபோன்று பார்லிமெண்ட் தூதுகோஷ்டி சுற்றுப்பயணம் செய்வது சுயராஜ்யம் கொடுக்க அல்ல, அதற்குப்பதிலாகச்சுயராஜ்யம்பெறமுட்டுக்கட்டையாக உள்ள காங்கிரஸ் குழுவினர்களின் பித்தலாட்டத்தையும், நாட்டில் அதற்கிருக்கும் உண்மைஎதிர்ப்பையும், அதற்காதரவு தரும் முதலாளிகள்கூட்டம், பனியாக்கள், ஆரியர்கள், உங்களைப்போன்ற திரிசங்கு சொர்க்கக் கும்பலாளர்களின் பித்தலாட்டத்தையும் நன்கு உணரவே அவர்கள் வருகின்றனர் என்பதைத்தாங்கள் அறிய வேண்டுகிறேன்.

கூத்தரசன்

●

மாஜிகனம் ஆச்சாரியார்,

தியாகராயநகர், சென்னை.

வருங்கால பகவத்கீதைப் பிரசங்கியே!

தமிழர் திருவிழாவில் ஆரியராகிய தங்களுக்கு இடம் இருந்ததுகண்டு தங்களுக்கு உள்ளூறத் தமிழர்களின் ஏமாந்தசோணகிரித்தன்மையைப் பற்றி அளவிலா இறுமாப்பும், மகிழ்ச்சியும் இருந்திருக்கும். தங்களுக்குமட்டுமல்ல, தங்களின் இனத்தவராகியகாப்பிக்கடைசப்ளையாள் முதல் ஸர். சி. பி. இராமசாமி அய்யர் வரையிலும் அப்படியேதான்.

என் செய்வது? இனப்பற்று என்னும் முதுகெலும்பில்லாத முத்துரங்கங்களும், கருத்துணர்ச்சியற்றகாமராஜ்களும்,குழைவையே உரிமையாகக்கொண்ட கல்யாணசுந்தரனார்களும்,திராவிடநாட்டில்,குறிப்பாகத் தமிழ்நாட்டின் அரசியல் அரங்கத்திலே நடமாடித் திரியும்வரை ஆரிய இனத்தவர்களுக்கு அகமகிழ்ச்சிதானே!

தமிழர் கூட்டமென்று கூறப்படும்அக்கூட்டத்தில் பேசியதாங்கள், தங்களின் வழக்கமான சுயநலப் புத்தியை மட்டும் விடவில்லை. ஆரியக் கூத்தாடினாலும்காரியத்தில்கண் என்பார்களே, அதைப்போன்றுபொங்கல்திருநாள்கூட்டத்தைத் தங்களின் இனப்பாதுகாப்புக்குப் பயன்படுத்திக்கொண்டீர்கள். இவ்வித புத்தி காமராஜ்களுக்கு இல்லையே என்று வருந்த வேண்டியிருக்கிறதே அன்றித் தங்களை ஒன்றும் கூறுவதற்கில்லை.

"சென்னை தமிழருடையதா, தெலுங்கருடையதா என்பதுபற்றிச் சர்ச்சை வேண்டாம். தெலுங்கர்கள் தமிழ்நாட்டு வளம்கண்டு இங்கு வந்தவர்கள், பலவருஷங்களாகத் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களைப் "போ" என்பது நியாயமாகாது. கணக்குப் போட்டுப்பார்த்துப் பஞ்சாயத்து மூலமாக இதைத்தீர்த்துக் கொள்ளலாம்" என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)

நாடும் நலமும்

4-ம் பக்கத் தொடர்ச்சி

கட்டுவதையும் பார்க்கும் தமிழன், பரிதாபத்திற்குரிய தமிழன் கூலியாகி வெளிநாடு செல்லும்தமிழன், கப்பல் தட்டில் நிற்கையில் இந்த நாட்டை வாழ்த்தி இருப்பான் என்று நீங்கள் கருதுகின்றீர்களா? கண்ணீரைக் கடல்நீரில் கலக்கிய அந்தவகையற்றவன்,' அஷ்டஐஸ்வரியங்கள் உன்னிடத்தில் இருந்தென்ன? நாங்கள் அனாதைகள் தானே! வற்றாத உயிர்நதிகள் இருந்தென்ன? எங்கள் வாழ்க்கை பாலைவனந்தானே!நஞ்சையும்புஞ்சையும் இருந்தென்ன?நாங்கள்பஞ்சைகள் தானே' என்றுசலிக்காமல்இருப்பானா? அரசியலை ஆங்கிலேயனிடமும் ஆத்மார்த்தத்தை ஆரியனிடமும் வாணிபத்தை வடநாட்டானிடமும் ஒப்படைத்திருக்கும் இந்நாட்டிற்கு எப்படி நலம் கிடைக்கும்? வெளிநாட்டிற்குக்கூலியாகச்செல்லும் இழிநிலை, பாடுபட்டும் பசியாற உணவின்றித் திகைக்கும் தேய்நிலை நீங்கவேண்டாமா? வர்ணாச்சிரம தர்மம் என்றுவகையற்றவர் பேசும் ஏற்பாடுவேறு ஒன்றுமில்லை,சூதுநிறைந்தசுரண்டல் இயந்திரம்தான் அது. அதைஒழித்தால் பாடுபடுபவன் பதைக்கவேண்டியதில்லை. உழைப்பு வீணாகாது. உலுத்தர் உயரமாட்டார். சக்திக்கேற்ற உழைப்பு! தேவைக்கேற்ற வசதி என்ற தத்துவத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியும்?

ஆகையால்தான் நாங்கள்வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவைகளை கொளுத்தவேண்டும் என்று சொல்லுகிறோம். இதற்கு இங்கே எதிர்ப்பு. இங்குமட்டுமல்ல எங்கும் எதற்கும் எப்பொழுதும் எதிர்ப்பு. ஒருகாலத்திலே ஜெர்மனியும், இங்கிலாந்தும் பிரான்சும்பாவ மன்னிப்புக்காக, பாதிரிமார்களிடமிருந்துபணம்கொடுத்துச் சீட்டுப் பெற்றனர். அந்தநாட்டு மக்கள் பாமரத்தைப் பயன்படுத்தியதாகஎண்ணியதுண்டு. அப்பொழுது மார்ட்டின்லூதர் என்ற மாவீரன்தோன்றினான்; மறுமலர்ச்சி உண்டாக்கினான். பிராட்டஸ்டெண்ட் கிளர்ச்சி நடந்தது.ஆனால் எதிர்ப்பு!இறுதியில் மாய்ந்தது. லூதரின் பெயர் அறிவுப் பூங்காவிலே பொறிக்கப்பட்டு இருக்கிறது. சீனாவிலே சன்யாட்சன்என்றபெரியார்தோன்றினர். சமுகத்திலே சீர்திருத்தம் செய்தார். ஆனால் எங்கும்எதிர்ப்பு! மலர்மாலையிட்டு வரவேற்க வேண்டியசமயத்திலே மூடரின் கயிறு விழுந்தது! கடைசியில் எதிர்ப்பு மாய்ந்தது! சன்யாட்சனை அந்த நாட்டுமக்கள் போற்றினர். ருஷியாவிலே ஸ்டாலின் தோன்றினர். புரட்சிசெய்தார். எவ்வளவோ இன்னல், எவ்வளவோ இடுக்கண் அனுபவித்தார். ஆனால் கடைசியில் வெற்றி. பிரான்சிலே 16-ம் ஆயி காலத்தில் வால்டையர் என்றபுத்துலகச் சிற்பிதோன்றினான்.புரட்சி நடத்தினான். இறுதியில்இறந்தான். இவன் ஏன் இறந்தான் என்பதை அந்தநாட்டுமக்கள்எண்ணிப்பார்த்தனர். இவன் எந்த இலட்சியத்திற்காக உயிர் துறந்தானோ அதையே தங்கள் இலட்சியம் என்றுகருதிப் புரட்சி நடத்தினர்; வெற்றிபெற்றனர். இவர்கள் எல்லாம் செய்தது நாட்டுக்கு நன்மை-நலம். புராணங்களிலே என்ன இருக்கிறது? அதனால் நமக்கு என்னபயன் இல்லாமல்போனது என்று கேட்கலாம். அவர்களுக்கு இதோ தருகிறேன், பாருங்கள்.

இராமன் காடு செல்கின்றான்; உடன் சீதை வருகின்றாள். அப்பொழுது அயோத்தியிலுள்ள பணத்தை யாருக்குக்கொடுக்கிறார்கள் என்று கருதுகின்றீர்கள்? அயோத்தியில் ஏழை எளியவர்களுக்கா? இல்லை. பின் யாருக்கு? நோயால்துன்பப்பட்டுக்கிடந்தவர்களுக்கா? இல்லை. இராமனிடத்தில் அன்பு கொண்டிருந்த பரதனுக்கா? இல்லை.வேறுயாருக்குவஞ்சகத்தை நஞ்சாகக் கொண்ட பிராமணர் களுக்கு. எப்படி இருக்கிறது ஆண்டவனுடையதிவ்வியகுணம்? இதை, என்தகப்பனார் பிரசங்கி சொல்ல கேட்டு இருப்பார்.அதன்படிசெய்கிறார்.எங்கள்வீட்டுவெண்ணெயில் 5 பலம் பிராமணர்களுக்குக் கொடுக்கப்படுகிறது மாதம் ஒருமுறை. புராணம் சொல்லுகிறபடி செய்கிறார்.ஆண்டவனுக்குஅந்தணர்மேல் தான் பிரியம்போலத் தெரிகிறது; ஆகையால் நாமும் செய்வோம் என்று செய்கிறார். இதிலே தவறு என்ன இருக்கிறது?இதற்குஊன்றுகோல் புராணம்; ஆகையால் புராணங்களைக் கொளுத்த வேண்டுமென்று சொல்லுகிறோம்.நீங்கள்பெரியபுராணத்தைப் பார்ப்பீர்களேயானால் பெரும்பாலும் தன்சொத்தை அந்தணருக்குத்தான் கொடுத்ததாக இருக்கும். ஊன்றுகோலை ஒழித்தால் அப்புறம் அவர்கள்ளதுவும் சொல்லமாட்டார்கள்.

ஆகையால் 1947ம் ஆண்டிலே பொங்கல் புத்தாண்டு விழாவிலே ஈரோட்டுப்பகுத்தறிவுசூரியன்பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமையில் இந்தப்புராணக்குப்பை களஞ்சு நெருப்பு வைக்கப்படும் என்பதைக்குறிப்பிட்டுச்சொல்லுகிறேன். எதிர்காலத்துத் திராவிடர்களாகிய நாங்கள்—எதிர்காலத்துத் திராவிடமணிகளாகிய நாங்கள்—எதிர்காலத்து இளைஞர் களாகிய நாங்கள் இந்தப்புராணங்களுக்கு நெருப்பு வைப்போம் என்பதை இங்கே குழுமியிருக்கும் அறிஞர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

நாங்கள் நாடு நலம்பெறப்பல துறைகளிலும் பாடுபடுகிறோம்.தமிழிலே இசைபாடுங்கள் என்று சொல்லுகிறோம். இதற்கு இந்த நாட்டிலே எதிர்ப்பு! இந்நாட்டுத் தேசியத்தாள்களும் குட்டித் தலையங்கம் எழுதிக்கண்டிக்கஆரம்பித்தன. நாங்கள் கேட்கிறோம் இந்த தேசியத்தாள்களை, ஜெர்மனியில் சென்று ஆங்கிலமொழியிலேஇசை பாடினால் அந்தநாட்டு மக்கள்சும்மாஇருப்பரா? பாடத்தான் பாடுவானா? ஜப்பான்சென்றுசீனமொழியிலே இசைபாடினால் அந்த நாட்டு மக்கள் வாளாயிருப்பர்? ருஷியாவிலே போய்ந்த ருமேனியாமொழியிலே இசைபாடினால் வாளாயிருப்பரா அந்த நாட்டுமக்கள்? பிரான்சிலே சென்று துருக்கிமொழியிலே இசைபாடினால் அந்தநாட்டுமக்கள் சும்மா இருப்பரா? ஏன் இந்தநாட்டுத்தேசியத்தாள்கள் இதைத் தெரிந்துகொள்ளவில்லை. தமிழிலேஇசை கிடையாது என்று எழுத ஆரம்பித்ததே இந்த நாட்டுத் தேசியத்தாள்கள். அன்று கோவலனும் மாதவியும் கடற்கரையிலேஇருந்துயாழை மீட்டிப் பாடினபாட்டுஎன்னஎன்று கருதுகின்றீர்கள்? இந்துஸ்தானி என்று எண்ணுகிறீர்களா? மலையாளம் என்று நினைக்கின்றீர்களா? சமஸ்கிருதம் என்று பார்க்கிறீர்களா? இல்லை. தமிழிலே பாடினார்கள். அந்த இசை இன்று எங்கே? அன்று ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆண்டவனை நினைக்கவைத்த தமிழை இன்று ஆலயத்தில்சொல்லுங்கள் என்று சொல்லுகிறோம்; இதற்கு எதிர்ப்பு, சிவபெருமானே கேட்ட தமிழ் என்று சொல்லுகின்றார்கள் சிவநேசச் செல்வர்கள். ஆனால் இவர்கள் சிவனைவணங்கும் போது ஹர ஹர நமப்பார்வதிபதே! என்று சொல்லுகின்றார்கள். இதை மாற்றிக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறோம். இதற்கு இந்த நாட்டிலே எதிர்ப்பு! எப்படி நலன் பெறமுடியும் இந்நாடு.

நாம் நலமுடன் வாழவேண்டுமானால் பழைய கொள்கைகளை ஒழிக்கவேண்டும்.இரவு காய்ச்சிய குழம்பு காலையிலே உதவுவதில்லை. இரவுமதுரமான பால் காலையிலே திரிந்து விட்டால்சாக்கடைசேருகிறது. மாலையிலே மாளிகைகளிலே மஞ்சரியின் கூந்தலுடன் கொஞ்சியமலர் காலையிலே கசங்கியதும் வீசிஎறியப்படுகிறதுகுப்பையிலே. பொருள்கள் மட்டுமல்ல, எண்ணங்கள், ஏற்பாடுகள், முறைகள், நீதிகள் இவையாவும் அப்படித் தான். காலத்துக்கு ஏற்றதாக கவைக்கு உதவக்கூடியதாக நாட்டுக்கு நலன்தரத்தக்கதாக இருக்க வேண்டும்என்று சொல்லுகிறோம்.

ரோம் சாம்ராஜ்ய அழிவுக்குக் காரணம்பிளபியன்,(தாழ்ந்த)பெட்ரிஷ்யன் (உயர்ந்த) என்ற பேதம் இருந்ததால். கிரேக்க சாம்ராஜ்ய அழிவுக்குகாரணம்,ஹெலாட்என்ற வகுப்பினருக்கு உயர்வகுப்பினர் இழைத்த கொடுமை. ஆகையால் தான் ஜாதிபேதம் இருக்கூடாது என்று சொல்லுகிறோம். உயர்ந்த தாழ்ந்த என்றபேதம் இருக்கக் கூடாது என்று சொல்லுகிறோம். இதற்கு இங்கு எதிர்ப்பு? எப்படி நலம் கிடைக்கும் இந்நாட்டுக்கு.

நாடுநலம்பெற ஒருபடைதிரட்ட வேண்டும். அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? வாழ்க்கைஎனும் பொய்கையிலே ஆரிய நச்சுக்கலக்கப் படாதபருவமாகஇருக்கவேண்டும். பகுத்தறிவு எனும் பகலவன் ஒளிபட்டு விஷக்கிருமிகளை ஒழித்திடும் பருவமாகஇருக்கவேண்டும்.மாயாவாதமும் மனமருட்சியும் நொருங்க நடுங்கும் பருவமாகஇருக்கவேண்டும்.வெட்டிப்பேச்சைத்தட்டிநடக்கும் தீரர்களாக இருக்கவேண்டும். மட்டித்தனத்தை மட்டந்தட்டும் மாவீரர்களாக இருக்க வேண்டும். சுலோகங்களால் சுகவாழ்வு நடத்தும்சுயநலமிகளை"சுருட்டிக்கொள் உன்சூதை" என்றும் உரைக்கும் சூரர்களாக இருக்கவேண்டும்.

இவர்கள்தான் சனாதனத்தை அழிக்கும் சுரங்கவெடிகள்! இவர்கள்தான் சாஸ்திரமெனும் சப்மெரினைத்தகர்த்தெறியும் டார்பிடோக்கள்! இவர்கள்தான் வைதீகபுரிமீது பகுத்தறிவுக்குண்டுகளைவீசும் வீர விமானிகள்! இவர்கள்தான்சமதர்மபுரிக்கு மக்களை வெற்றிகரமாக அழைத்துச்செல்லும் முன்னணிப் படை! இவர்கள்தான், யுக யுகமாகக்கட்டி அவ்வப்பொழுது பழுது பார்க்கப்பட்டு பலப் படுத்தப்பட்டபார்ப்பனியக்கோட்டைகளைப் படுசூரணமாக்கும் டாங்கிப்படை. ஆகையால் இந்தப்படை இன்றியமையாதது. இந்தப்படை உண்டாகா முன் நாடுநலம்பெற முடியாது; இதுதிண்ணம்.

★

செங்கற்பட்டு

14—1—46ல் ஷெயூர் திராவிட இளைஞர்கழகச்சார்பில் தோழர் ச. சிவகுமாரன் தலைமையில் தமிழர் திருநாள் மிகச்சிறப்புடன் நடைபெற்றது. பல தோழர்கள் பொங்கற்புதுநாளைப்பற்றிப்பேசினர்.

★

திறந்த மடல்

5-ம் பக்கத் தொடர்ச்சி

இக்கட்டத்தில்தான் தங்களின் ஏமாற்றுக்குணமும், சுயஜாதி அபிமானமும், இனப்பற்றும், அவ்வினத்திற்கு நாளை வரப்போகும் ஆபத்துக்கு ஜாடையாக சரி செய்யப்பார்க்கும் சூழ்ச்சியும் காண்கின்றன.

தெலுங்கர்கள் தமிழ்நாட்டுக்குக் குடிபுகுந்தவர்கள் என்று எவரும் கூறமுடியாது. தமிழர், தெலுங்கர், மலையாளர் ஆகிய அனைவரும்ஒரே இனத்தினராகும். ஒரே மொழியினருமாகும். இவற்றிற்குப்பல ஆராய்ச்சிச் சான்றுகள் உள்ளன, அதைத் தாங்களும் அறிவீர்கள்.

ஆரியர்கள் இந்நாட்டில் குடிபுகுந்த பின்னரே தமிழ்மொழிசிதைவுற்றுத் தெலுங்கு முதலிய பிரிவு மொழிகள்ஏற்பட்டு அதனால் திராவிடர்களுக்குள்ளே சிறு பிரிவுகள் ஏற்பட்டனவேயன்றி, இனப் பாகுபாடு இல்லை. தமிழர்—தெலுங்கர் கோனார்—அனைவரும்ஒன்றேயாகும்.

ஆனால் இது தங்களுக்குத் தெரியாதா? தெரியும். தெரிந்தும் ஏன் இவ்வித வேற்றுமைச்சூழ்ச்சியைக் கக்கினீர் என்பதும் எனக்குத்தெரியும். திராவிடநாட்டில் மற்ற இனத்தவர்களின் ஆதிக்கத்திற்கு இடமில்லையெனத்திராவிடமக்கள்கிளர்ச்சிசெய்து வருகின்றது, ஆரியர் திராவிட நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்னும் புரட்சி வாடைஅக்ரகாரத்தின் அடிவயிற்றையும் கலக்கிவிடுகின்றது.

எனவே தெலுங்கர்கள் — தமிழர்கள் என்ற பிரிவை விரிவுபடுத்தி அதே சமயத்தில் தங்களின் இனஆதிக்கத்தை நிலைநாட்டிவிடலாம் திராவிடத்திலே என்று கருதுகின்றீர்போலும்.

ஆச்சாரியாரே! தங்களின் தகிடுதத்தங்கள் காமராஜரிடம் மட்டும் செல்லுமேயன்றித்திராவிடத்தில் செல்லுபடியாகாது. உங்களது சூழ்ச்சியில் தமிழர்களோ—தெலுங்கர்களோ திராவிடஇனத்தைச்சார்ந்த மற்றவர்களோ ஏமாறுவிடமாட்டார்கள். ஏமாந்தகாலம் மலையேறிவிட்டது. இனி வரப்போகும்காலம் திராவிடத்திலே ஆரியர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் ஆதிக்கம் செலுத்த இடமில்லை, அதுதான் பொங்கல் திருநாளின் புரட்சியாகும். எனவே இதை உணர்ந்து விரைவிலே தங்களது திருக்கூட்டத்தாருடன் பஜனைபாடி பகவத்கீதையைப் பிரசாரம் செய்ய புறப்பட்டுவிடுங்கள். அதுகூடத்திராவிடத்திலேஉங்களது கதாப்பிரசங்கம்இனிப்பலிக்காது, பனியாக்கள் வட்டாரத்திற்குச் சென்று விடுங்கள் என்று பொங்கல் புதுநாளில் உமக்குக்கூறுகிறேன் இந்தக்கருத்தை. அதைவிடுத்து ஆங்கிலேயர்போல்ஆரியர்களும் எல்லையைப்பிரித்தாளும் முயற்சியில்ஈடுபட்டு, அந்தச் சர்ச்சையை வளர்த்துக்கொள்ளவேண்டாம். திராவிட இனம் இனி எந்தஅந்நியனுக்கும் அடிமையாய் வாழாது, வேண்டுமானால் தனிப்பட்ட காமராஜர்கள் தங்களுக்குக் கீழ்ப்படிந்து விடலாம். இதைக்கொண்டே திராவிடத்தை அளவிட்டு விடுவீர்களானால் ஆழந்தெரியாமல் காலைவிட்டு அவதிப்பட்டவன்கதிக்கு ஆளாவீர், இதுநிச்சயம். இதற்கு மேலும் உதாரணம் வேண்டுமானால் அன்றைய கூட்டத்தில், தாங்களே ஒப்புக்கொண்டீர்கள் கட்டாய இந்தியை வைத்தது தவறு என்று. எனவேஅதைக் கருத்தில் வைத்து, திராவிடர்களாகிய தெலுங்கர்—தமிழர்—கோனார்ஆகியவர்களிடையே பிளவை உண்டுபண்ணச்சூழ்ச்சி செய்யாதீர்கள், மீறிச்செய்தால் அப்பிளவில் ஆரியம் அமிழ்ந்துவிடும்.

கூத்தரசன்

★

அம்பேத்கார் திராவிடர்கழகம் திருமழபாடி.

திருச்சிஜில்லா ஷ கிராமஆதித்திராவிட இளைஞர்களால், அம்பேத்கார் திராவிடர்கழகம் 1—1—46ல் நிறுவப்பட்டது.

விழிப்போரே நிலைகாண்பார்! விதைப்போரே அறுத்திடுவார்!

புரியாத பிரச்னை

★

பாகிஸ்தான், பாகிஸ்தான் என்று பேசுகிறார்கள் ஆனால் அதை விளக்கவேஇல்லை!

பாகிஸ்தான் என்ற கூச்சலிடுகிறார்கள், ஆனால்அதன்பொருளேவிளங்கவில்லை!

என்று பண்டித நேரு, சிந்து மாவட்டச் சுற்றுப் பயணத்தின் போது பேசியிருக்கிறார். உண்மையில், பாகிஸ்தானின் பொருள் விளங்க வில்லை, விளக்கப் படாததால் என்று பண்டிதர் கருதினால், தமது மின்னல் தாக்குதலைக் கொஞ்சம் நிறுத்திவைத்து விட்டு, விளக்கம் கேட்கலாம்; விளங்கிக் கொள்ளலாம். அவரோ, விளக்கம், எத்தனை முறை கூறப்பட்டாலும் எவ்வளவு தெளிவாக்கப் பட்டாலும், பாகிஸ்தான் விளக்கப்படவில்லை என்று கூறியபடி இருக்கிறார்.

பாகிஸ்தான் கூடாது!
அது மகா ஆபத்து!
அடிமை நாடாகவே இருக்கும்!
சிறுநாடுகளுக்குவாழ்வுஇல்லை.
பாகிஸ்தான் கிடைக்காது.
பாகிஸ்தானுக்குக் காங்கிரஸ் இணங்காது.

இவையும் பண்டித நேருவின் முழக்கங்களே. விளங்காதது, எப்படி இவருக்கு, ஆபத்தானது, அடிமைத் தனத்தின் இருப்பிடம், வாழமுடியாதது என்றகருத்தைத் தந்தன! ஒருபொருளை விளக்கவில்லை கூறுபவர், விளங்கிக் கொள்ளவுமில்லை பண்டிதர்; இதுஉண்மையானல், அதே பிரச்னையை, எந்த ஆதாரத்தைக் கொண்டு ஆபத்தானது, அழிவு தரக்கூடியது, என்று கூறலாம்? பொருந்துமா?

விளங்காததை,மற்றவரும்விளங்கிக்கொள்ள முடியாதபடி இவர் வெறுப்பானேன்? பாகிஸ்தான் என்றாலே என்ன வென்று புரியவில்லை என்று கூறிவிட்டு அதே பாகிஸ்தானைக் காங்கிரஸ் ஏற்காது என்றும் எக்காளமிடுவதிலே என்ன அர்த்தம் இருக்கிறது. ஒன்றுக்கொன்று பொருந்தக் காணோமே! பண்டித நேருஎன்னசாமான்யரா, பொருத்தம் பார்த்துப்பேச! அவர் மகாத்மாவின் வார்சு, ஆகவே மனம் போன போக்கின்படி பேசலாம்!! இதற்கிடையே, நேரு, ஒரு உண்மையை மறந்து விடுகிறார். பொருத்தமற்ற முறையிலே இவர் பேசிக்கொண்டிருக்கும்போது, நாட்டிலே, மக்கள் பாகிஸ்தானை, விளக்கமாகத்தெரிந்து கொண்டு வருகிறார்கள், இவருடைய போக்கையும் புரிந்து கொண்டார்கள்.

தந்தி:- "புருமார்க்" திருச்சி.



முரண்பாடே அவருடைய மூச்சு, முழக்கமிடுவதே அவருடைய இலட்சியம், முன்கோபமே அவருடைய ஆபரணம், காந்தி விசுவாசி என்பதே அவருக்குள்ள மூலதனம் என்பதை மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

பாகிஸ்தான் என்றால் இன்னது என்று தெரிய வில்லையாம் இவருக்கு! இவருக்குத் தெரியாவிட்டால் அதனால் நஷ்டமொன்றுமில்லை தெரிந்துகொள்ளவேண்டியவர்கள்நன்கு தெரிந்துகொண்டார்கள். டில்லி சட்டசபைத் தேர்தலிலே 30-க்கு 30-ம் வெற்றி கிடைத்தது லீகுக்கு, இந்தவெற்றி, முஸ்லீம் பொதுமக்கள், பாகிஸ்தான் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொண்டார்கள் என்று தெரிவிக்கிறது. ஜனநாயகமுறைபற்றியவிளக்கம் கூறும் பிரிட்டிஷாரும், இந்த வெற்றி, பாகிஸ்தான் கோரிக்கையை முஸ்லீம் பொது மக்கள் ஆதரிக்கிறார்கள்என்பதையே எடுத்துக்காட்டுகிறது என்பதையும் தெரிந்து கொண்டார்கள். பாகிஸ்தான் பெறவேண்டியவர்களும்தரவேண்டியவர்களும், தெரிந்து கொண்டனர், நடப்பதைப்பார்த்துக்கொண்டுஇருக்கவேண்டிய நேரு, பாகிஸ்தான் என்றால்எனக்குப்புரியவில்லை யாரும் விளக்கவேஇல்லைஎன்றுகூறுவ்தாலே, யாருக்கு நஷ்டம்! புரியவில்லை புரியவில்லை என்று இவர் முழக்கமிட்டுக்கொண்டே இருக்கையில் ஓர்நாள் பாகிஸ்தான் அமைக்கப்பட்டு விடும், அப்போது இவருக்கு, எப்படி முஸ்லீம்களுக்குப் பாகிஸ்தான் கிடைத்தது என்பதும்புரியப்போவதில்லை. புரிந்தால் என்ன புரியாவிட்டால் என்ன, புயலெனச்சுற்றி, இடியெனமுழக்கிவர அவருக்குத் தெரியும்! அது போதாதா இங்கு!!

●

திராவிடர் பெடரேஷன் (சென்னைக்கிளை)

சென்னைமாவட்டத் திராவிடர்பெடரேஷன்—சென்னைமாவட்ட சுயமரியாதைச் சங்கம் ஆகியவைகளின் புதிய நிர்வாகக் கமிட்டிகளின் தேர்தல் 6—1—46ல் வித்வான் பி. செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. சென்னைத்திராவிடர்பெடரேஷனுக்குஒவ்வொருவட்டத்திற்குஇரண்டு பிரதிநிதிகள்வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்தோழர் சி. டி. டி. அரசு. பின்னர் சென்னை சுயமரியாதைச்சங்கத்திற்கும் ஒவ்வொருவட்டத்திற்குஇரண்டு பிரதிநிதிகள்வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் வித்துவான்பி.செல்வராஜ்.

திராவிடர் கழகம் பிள்ளையார்பாளையம்

28—12—45ல் பிள்ளையார்பாளையம் திராவிடர்கழகத்தின்சார்பாக சி. வி. எம். அண்ணாமலைதலைமையில்வாராந்திரஆரம்பக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் திராவிடர் கழகத்தைப்பற்றி அ. கோ. இரத்தினவேலு, கிருட்டிணமூர்த்தி, மு. குப்புசாமி, என். கோதண்டபாணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

புராணப்புரட்டு விளக்கக்கூட்டம்

காஞ்சீபுரத்தில் 3-1-46ல் இராசகோபாலகல்யாண மண்டபத்தில், மேற்படிகூட்டம் தோழர்ஈழத்தடிகள் தலைமையில் நடைபெற்றது. பெரியபுராணப்புரட்டு என்பதுபற்றித்தோழர் அண்ணாத்துரை சொற்பொழிவாற்றினர்.

மறைவு

காரைக்கால் "தொண்டன்" பத்திரிக்கையின் ஆசிரியரும், சொந்தக்காரருமான தோழர் கோ. சொக்கலிங்கம் அவர்கள் தனது 22வது வயதில் 1—1—46ல் இயற்கையெய்தின செய்திகேட்டு வருந்துகிறோம்.

புலிநகம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

"சலாம்! பண்டிட்ஜீ!" என்று சந்தோஷமாக, கோபிநாத்தை வரவேற்றான். அன்று மட்டுந்தானா! 1946ல் கூடத்தான்! "வாங்க ஸ்வாமி" என்று கோபிநாதர்களை வரவேற்கிறார்கள்!

* * *

"சரண் அடையச் சம்மதித்து விட்டான்!"

"பஹூத் அச்சா! பண்டிட்ஜீ! அவன் மகாமுரடன்என்பார்களே' எப்படிப்பணியச் சம்மதித்தான்?',

"முரடனாகஇருக்கட்டுமே, சைன்யாதிபதி! அவன் என்ன குருடனா, இந்தப் பிரம்மாண்டமான படை நம்மிடம் இருப்பதை அறியாதிருக்க!"

'கோபிநாத்! உமது வெற்றிஇது'

'ஒருவிதத்தில் என்வெற்றிதான்'

* * *

ஒரு விதத்தில் மட்டுமா, சகல விதத்திலும் கோபிநாத்தின் வெற்றிதான் அது. போரிடப்புறப்பட்ட அப்சல், போரிடாமலேயே மாவீரனை மண்டியிடச் செய்துவிட்ட மகிழ்ச்சிப்பெருக்கால், கேளிக்கையாகத்தானேஇருந்திருப்பான். ஏன் இராது? எந்தப்பக்கமும் எந்தவீரனுடைய வெற்றிமுரசு கேட்டுவந்ததோ, எந்த வீரனின் வெற்றிக் கொடிமலை உச்சிகளிலெல்லாம் மகோன்னதமாகப் பறக்கவிடப்பட்டதோ, அந்தவீரன், மண்டியிடச்சம்மதிக்கிறான் என்றால், மகிழ்ச்சி பிறக்காதிருக்குமோ, அப்சல்கானுக்கு.

* * *

அந்தமகிழ்ச்சி பன்மடங்குஅதிகமாயிற்று, சிவாஜியால் அனுப்பப்பட்ட தூதன், அப்சலிடப், சரணாகதியை உறுதிப்படுத்தவந்தபோது. கோபிநாத் பண்டிட்ஜி, அப்சல்கானால் அனுப்பப்பட்டதூதன்! சிவாஜி அனுப்பிய தூதனும், ஓர் பிராமணனே; பெயர் கிருஷ்ணாஜீ பாஸ்கர்.

"சிவாஜி, சமர் செய்யவிரும்பவில்லை. பீஜபூர் ஆட்சிக்கு அடங்கி நடக்க ஒப்புக்கொள்கிறார். பீஜபூர் சுல்தானின், அதிகாரத்துக்குக்கட்டுப்பட இசைகிறார், சரண் அடைய விரும்புகிறார், வீராதிவீரனே! எங்கள் சிவாஜியின் இந்த வேண்டுகோளைத்தயைகூர்ந்து ஏற்று அருள வேண்டுகிறேன்." என்று பாஸ்கரன், கூற, அதுகேட்டுப்பரமானந்தம் அடைந்த அப்சல்கான், "நமது படையுடன், பிரதாப்கார் நகருக்குள் பவனி வருவோம், அங்கு சிவாஜி பணியட்டும், பீஜபூர் ஆட்சியின்கீழ் வாழச்சம்மதிக்கும் சிவாஜிக்கு நாம், சுல்தானின் பிரதிநிதி என்றமுறையிலே, பேட்டி தருகிறோம்" என்றுகூற, பாஸ்கரன் பயந்து, தழதழத்த குரலில், "ஒரு விண்ணப்பம்! சிவாஜி, சரணாகதிசம்மந்தமாகப் பேசுவதற்காகத் தங்களைத்தனியே சந்திக்க விரும்புகிறார். இங்கேயேவர எண்ணினார்........." என்று வலைவீசும் பேச்சைத்துவக்கினார். சதிக்கூட்டத்தலைவன், கோபிநாத், "இங்கே இருக்கும் பெரும் படைமுன்வர, அஞ்சுகிறான் உங்கள் அசகாயசூரன்! பிராமணரே! ஏன் மறைக்கிறீர், வெட்கமோ!" என்றுகூறினார். அப்சல்கானின் ஆனந்தம் அளவு கடந்ததாகிவிட்டது. "கோபிநாத்பண்டிட்ஜீ! அவ்வளவு பயங்கொள்ளியா சிவாஜி" என்று கேட்டான் அப்சல். அந்தக்கேள்வியை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த கோபிநாத், முகஸ்துதியை வாரி வாரி வீசினான், அப்சல்கானின் யூகம் அழியுமளவு.

"இதிலென்ன ஆச்சரியம், சேனாதிபதி! அவன், உமது ஜெயங்களைப்பற்றிக் கேள்விப்படாமலா இருந்திருப்பான். ஏதோ இதுவரையில், நாதியற்ற நகரங்களையும், நெஞ்சில் உறுதியற்ற கும்பலையும்தாக்கி, வெற்றிகண்டேன் என்று வீருப்பு பேசித்திரிந்தான். இன்றுமகத்தான தோர் படையை நடத்தும், தீரபுருஷனாகிய அப்சல்கான், களத்திலே சிம்மம்போல் நிற்கும் தலைவன், வந்திருக்கிறான் என்று தெரிந்ததும், நடுநடுங்கிப்போய்விட்டான். பீஜபூர் சமஸ்தானத்தின் பெருமையை அறியானா? தன்பக்கம், பீஜபூரின் திருஷ்டி படாதிருந்தவரையிலே தப்பிப்பிழைத்தான். இப்போது?"

இந்த முகஸ்துதி, அடியோடு அப்சலைக்கவிழ்த்துவிட்டது.

"சரி! பயம்வேண்டாம் என்று சொல். நானே, நாம், தனியாக, ஆயுதமின்றிவருகிறோம், சிவாஜியின் சரணாகதிக்கான சம்மதத்தைப்பெற" என்று கிருஷ்ணாஜீ பாஸ்கருக்குக் கூறி அனுப்பிவிட்டு, "இப்படிப் பட்ட பயங்காளியை நான் கண்டதே இல்லையே!" என்று எண்ணி எண்ணிப்பூரித்தான்.

* * *

சதியாலோசனைத் திட்டத்தின் படியே சந்திப்பு நிகழ்ந்தது. போர்வீரர்களின் துணையின்றி, ஆயுதமுமின்றி, சிவாஜியைச்சந்திக்க அப்சல்கானை அழைத்துவந்தான் கோபிநாத். சிவாஜி, நேசத்தையும், சமரசப்பாசத்தையும் காட்டுவதுபோல, அப்சல்கானைத்தழுவினான். ஐயோ! என்றுஅலறினான்அப்சல்கான் அவன் அடிவயிற்றிலே புகுந்தது சிவாஜியின் கரத்திலே, மறைத்து வைக்கப்பட்டிருந்த புலிநகம்! சரணாகதியை ஏற்றுக்கொள்ள வந்த அப்சல்கான், வஞ்சகமாக வதைக்கப்பட்டான். இதற்குள், அப்சல்கானின் படை, புகக்கூடிய பாதை அடைக்கப்பட்டுவிட்டது. சிவாஜியின்படை, இனிப்போர் இல்லை, என்று எண்ணி, ஆயுத்தம் ஏதும் செய்யாது, ஆனந்தத்திலேமூழ்கியிருந்த அப்சல்கானின்படைமீதுபாய்ந்தது; அங்கேயும்படுகொலைதான்!! கோபிநாத்பண்டிட்ஜீயும் கிருஷ்ணாஜீ பாஸ்கரும் சிவாஜியை, வீரனை, வஞ்சனையில் ஈடுபடச்செய்து, சதிச்செயல்புரியவைத்து மறைக்கமுடியாத பழியை மாவீரர் தலைவனுக்குவாங்கித்தந்தனர், அப்சல்கானின் உயிரையும் போக்கினர். அப்சல்கானைச் சிவாஜி அக்ரமமாகக்கொன்ற வரலாற்றுச் சம்பவத்தையே மக்கள் அறிவர், வரலாற்று ஆசிரியர் கூறுவார், ஆனால், கோபிநாத்பண்டிட், கிருஷ்ணாஜீ பாஸ்கர், என்பவர்களைப் பற்றிக்கூறார். சரித்திரம் என்றால் மன்னர்கள் கதைதானே என்று மக்களும் எண்ணிக்கொண்டு, கோபிநாத், பாஸ்கர் போன்றவர்களைக் கண்டுபிடிக்கமுயல்வதில்லை. ஆனால் இந்த உபகண்டத்து வரலாற்றிலே, கோல்கொண்டவர்களைப்பற்றி அறிந்து கொள்வதைவிட, கோபிநாதர்களைப்பற்றித்தெரிந்துகொண்டால்தான், உட்பொருள் விளங்கும், உண்மை துலங்கும். அப்சல்கானின் மரணம், புலிநகத்தால் என்று கூறுவதைவிட, பூசுரரின் புன்னகையால் என்று கூறுவதே பொருந்தும்!

திருச்சி

வரகனேரி ஆனந்தபுரத்தில்திராவிடர் கழகம்21—12—45ல் திறவப்பட்டு, தோழர் த. சாம்பசிவம் தலைவராகவும், தோழர் மு. நல்லுசாமி நிதிக்காப்பாளராகவும், தோழர் த. ச. மணி செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பனியா இங்கே சேட்டு!

தமிழர் அங்கே கூலி!!

ஆண்ட தமிழர் ஆண்டியான அவதி

"திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும்" என்றஇலட்சியம், இங்கு, வெளியார் விடாமல் நடத்தும்பொருளாதாரச்சுரண்டலைத் தடுக்கும் திட்டம், என்பதை நாம் பன்முறை விளக்கியிருக்கிறோம். பொருளாதாரநிலை, இன்றிருப்பதுநீடித்தால், வளர்ந்தால், வடநாட்டவருக்குத் திராவிடம், திருவடிதாங்கியாவது தவிர வேறுவழியில்லை என்பதைப் பன்முறை விளக்கினோம், பனியாக்கள் இங்கு "சேட்டுகள்" ஆகிவாழப், பண்டைப்பெருமைபெற்ற, ஆண்ட தமிழன் ஆண்டியாகி அவதிப்பட்டு, பர்மா,மலாய், சிலோன் பகுதிகளுக்குச்சென்று 'கூலி'யாக இருக்கும், மனம்வேகும் மானக்கேட்டினை எடுத்துரைத்தோம். 'தேசபக்தர்கள்' இந்த தத்துவத்தைஉணரமறுத்துவருகின்றனர். கவனிக்கவே மறுத்தனர் முதலில்; இப்போது கவனிக்கத் தொடங்கியுள்ளனர், ஆனால் மறுத்துவருகின்றனர். அவர்களின் மனவளர்ச்சியிலே நமக்கு நம்பிக்கைஅழுத்தமாக உண்டு. இன்று மறுப்பவர்கள், நாளை, மனமார, நாம் கூறுவது சரிஎன்பதை உணரப் போகிறார்கள் என்று உறுதி இருப்பதாலேயே நாம், கும்பலுடன்சேர்ந்துகூவிக்கிடப்பது எளிது என்பதறிந்தும், விடாப்பிடியாகத், திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்தைக் கூறிவருகிறோம்.

அந்த இலட்சியம், புதுவை அன்பர் சுத்தானந்த பாரதியாருக்குப் பிடிக்குமோ இல்லையோ நாம் அறியோம், ஆயினும்அவருடைய கட்டுரை ஒன்றில் காணப்படும் சில கருத்துகள், அவரும் வடநாட்டவரின் பிடி தமிழகத்திலே அதிகமாவதை உணர்ந்து, ஓரளவு அதன் கேடு பற்றிக் குமுறவும் செய்கிறார் என்பதை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன. எனவே, அவருடைய கட்டுரையிலுள்ள ரசமான சில பகுதிகளைக் கீழே தருகிறோம்.

"கட்டுரை" காரைக்குடி, "குமரன்" பொங்கல்மலரில் காணப்படுவது. ஆராய்ச்சிக் கட்டுரைகளும், அழகிய சிறுகதைகளும் பாங்குடன், மேற்படி பொங்கல் மலரில் மணம்கமழப்பூத்துள்ளன.

"இங்கே மனித வாழ்விற்குவேண்டிய எல்லாவளங்களும் உண்டு. தமிழர்கப்பல் தொழில் சரித்திரப்புகழ் பெற்றது: தமிழர் வீரப்புகழ் பர்மா, மலாயா, மணிலா, ஜாவா, சீனம், அரேபியா, பொனீசியா, கார்த்தாகம், ரோம் முதலிய நாடுகளில் பரவியிருந்தது. தமிழர் கப்பலைஒருகாலம் உலகம் எதிர்பார்த்துப் பிழைத்தது. தமிழர் நூற்றுநெய்த துணிமணிகள் யவன சோனகரின் மானத்தைக்காத்தன. ரோம் வீரர் தமிழ்மன்னரின் வாயிற்காப்பாளாயிருந்தனர். எகிப்து மன்னர் தமது படையைப் பயிற்றத் தமிழ்வீரரை வரவேற்றனர்.

இப்படிப்பட்ட வீரமரபினர் இன்று எந்நிலையிலிருக்கின்றனர்! சுற்றிலும் பாருங்கள்!

ஒருநாட்டின் உயிர்நாடிகள் தொழிலாளர்களே; தமிழ்நாட்டுத்தொழிலாளர் எங்கே? எல்லாரும் கங்காணி பின்னே கண்காணா நாடுகளுக்குச்சென்று அடிமைக்கூலிகளாக வேலை செய்து வயிறு வளர்க்கிறார்கள். போர்க்கப்பலில் ஆளச்சென்ற தமிழர்,இன்றுவெள்ளையர்தோட்டங்களில் இடுப்பொடிய வேலை செய்து சவுக்கடி படுகிறார்கள். தமிழர்கள் இரத்த வேர்வையாலேதான் தென்னாப்பிரிக்கா செழித்தது: பீஜி செழித்தது, பர்மா, மலாயா நிலங்கள் பசும்பொலிவெய்தின. தமிழர் உயிரைக்கொடுத்து வேலைசெய்துதான் சுரங்கத்தங்கம் வெளியேறிச்சொக்கத்தங்கமானது. கனிகளிலும் தோட்டங்களிலும் தமிழர் பாடுபடுகின்றனர். அற்பக்கூலிவாங்கி அரைக்கஞ்சி குடிக்கின்றனர்.. ஆடுமாடுகள்போல நடத்தப்படுகின்றனர். இவர்கள் உழைப்பினால் கொழுத்துச் செல்வரான வெள்ளைத் துரைகளுக்கு நன்றியுண்டா? இல்லை! இல்லை. உலகெங்கும் தமிழ்க்கூலிகள் நாய்ப்பாடு படுகின்றனர்.

தமிழர், தொழிலாளிகளை மட்டும் கப்பலேற்றவில்லை. தமிழ்முதலாளிகளும்கப்பலேறிச்சென்றனர். தமிழ்நாட்டுச்செல்வர் தனவணிகர் இவர்கள் முதலெல்லாம்பிறநாடுகளிற் சிதறிக்கிடக்கின்றன. இலங்கை, பர்மா. மலாயா, சையாம் நாடுகளை நமது வணிகர் பணமும் உழைப்புமே செழுமையாக்கின. பர்மாவில் பலகோடி ரூபா முடங்கிக்கிடக்கின்றது. மலேயாவில் பலகோடி. பர்மா நெல் வயல்களெல்லாம் தமிழர்நெற்றி வியர்வையில் விளைந்தன. பர்மா வியாபாரத்திற்குப் பணம் தமிழ்வணிகர் பெட்டியிலிருந்தே சென்றது. பலனென்ன? "தமிழா வெளியேபோ" இதுதான்.

1. தமிழர் பணமெல்லாம் இனித்தமிழகத்திலேயே சுழலவேண்டும்.

2. தமிழ்நாடு எல்லையற்ற செழிப்புடையது. இங்கே ஏராளமான நிலவளமுண்டு, நீர்வளமுண்டு. ஓர் அடிகூடத் தரிசுபோடாமல் தமிழர் பயிரும் தொழிலும் இங்கே நடத்துக.

3. உயிர்போனாலும் சரி இனித்தமிழரைக்கூலிகளாகக் கப்பலேற்றக்கூடாது. தமிழ்த்தொழிலாளரைக்கொண்டு தமிழ் நாட்டை வளப்படுத்துக.

4. வடக்கிருந்து சேட்டுகள் வந்து இங்கே தொழில் நாட்டிச்செழிக்கிறார்கள். ஒருலோட்டாவுடன் வந்தவன்பத்து ஆண்டுகளில் சவுக்காராய் விடுகிறான். தமிழர் தமிழ்நாட்டுத் தொழில்களையெல்லாம் கைப்பற்றுக! தமிழர் விளைத்ததையே தமிழர் உண்க. தமிழர் தமிழ் விரதம்பூண்க!

5. செல்வர். பணத்தைப்பூட்டி வைக்காமல் பயனுள்ள தொழில்களில் போட்டுப்பலருக்கும்உழைப்பும்பிழைப்பும்தருக. செல்வம்நிலை யில்லை. இந்தப்போரில்எத்தனையோ கோடீசுரர் பஞ்சைகளானார். செல்வம் உள்ளவர் உடனே அதைத் தொழிலாக்கி ஏழைகள் பாடுபட்டுப் பிழைக்கச்செய்க.

6. தற்கால வாழ்வுக்கேற்ற தொழில்களையெல்லாம் தமிழர்தமிழகத்திற்செய்க. தமக்குக்கண்டு மிஞ்சியதைக்கப்பலேற்றிப் பிறநாடுகளில் விற்கலாம். இதுவே பழந்தமிழர் செய்த முறை.

7. தமிழ்இளைஞர் நல்லகல்வி கற்று ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களுக்குச்சென்று யந்திர நுட்பங்களையும்காலத்திற்கேற்ற கலைகளையும் கோர்ந்து வருக. அப்படிவந்தவர்களுக்குச் செல்வர்,முதல் உதவித்தொழில் நடத்துக. புதுமுறை விவசாயம், நெசவு, இரும்புத்தொழில், காகிதத்தொழில் ரப்பர்த்தொழில், பென்சில் தொழில் முதலிய எத்தனையோ ஆயிரம் தொழில்களுண்டு. திறமையுடன் செய்தால் தமிழர் அனைவருக்கும் வேலை கிடைக்கும். தக்க பொருளும் கிடைக்கும்! நல்லகல்வி,தொழில்முயற்சி, கூட்டுறவு ஆகிய மூன்றும் முன்னேற்றத்தின் உயிர்நாடிகள் — அறிக. சோம்பல் ஒழிக! ஏக்கம் ஒழிக! உள்ளத்தில் தமிழுணர்ச்சியும் கைகளில் தொழில் முயற்சியும்கொண்டு தமிழர் முன்னேறுக.இன்றுவரையில் தமிழர்பட்ட சிறுமைபோதும்! ஏமாற்றம்போதும். இனி நம்மவர் வீறுகொண்டெழுந்து காலத்தை வெல்க! தமிழர் தலைநிமிர்க!"

—●—

ஈரோடு

ஈரோடு முஸ்லீம் லீக் ஆதரவில், ஜின்னாமைதானத்தில் தோழர்கான் சாகிப் ஷேக்தாவுது அவர்கள்தலைமையில் ஜின்னா பிறந்த தினவிழா 31—12—45ல் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சென்னை மாகாண முஸ்லீம்லீக் காரியதரிசி ஜனாப் கே. டி. அகமதுஇபுராகீம், திருப்பூர்மொய்தீன், வேலூர்மௌலானா ஷெர்புதீன், மேலப்பாளையம் இப்ராகீம், தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், சி. என். அண்ணாத்துரை ஆகியோர்சொற்பொழிவாற்றினர்.

பழனி

26–12–45ல் திராவிடர்கழகத்தலைவர் கே. நாராயணசாமி தலைமையில் ஏ. பி. ஜனார்த்தனம் எம்.ஏ.பண்டிட்ஜெய்லானி ஆகியோர் திராவிடர்கடமைபற்றிப்பேசினார்கள்.

உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணசுவாமி கோவில் தெரு,
உறையூர் p.o. திருச்சி.

போரில் வெற்றி!
எனவே சமாதானகால தேவைகளிலும் வெற்றி வேண்டும்.
ஆகையால்

குரு மருந்துகள்

இனி உங்கள்தேவைக்குக்கிடைக்கலாம்.

★

முக்கிய தயாரிப்புகள்.

	ரூ.	அ.	பை
குரு தைலம் (210-வியாதிகளுக்கு)	1	8	0
குரு பல்பொடி (தந்தரோகங்களுக்கு)	0	5	0
குரு களிம்பு (பத்ரூ, படைகளுக்கு)	0	14	0
குரு ஆயுள்வேத லேகியம்	2	0	0
குரு ஆஸ்த்மா டிராப்ஸ் (இருமல்-காசங்களுக்கு)	2	0	0
குரு தாதுவிருத்தி மருந்து (வாலிப-வயோதிகர்களுக்கு)	5	0	0
குரு சந்தான சொர்ணம் (ஸ்திரீகள் கர்ப்பரோகங்களுக்கு)	5	0	0
குரு குழந்தை செட் 7-மருந்துகள் (Children Set) (குழந்தைகள் நோய்-பாதுகாப்புக்கு)	8	10	0

குரு மருந்துகள்
குடும்ப பொக்கிஷம்.

●

உங்கள் ஊர் மருந்து ஷாப்புகளில்கேளுங்கள். இல்லாவிட்டால்,

டாக்டர்:

ஏ. மதுரம் சன்ஸ்.,
குரு மருந்து சாலை,
திருச்சினாப்பள்ளி.

மறை அறியார் எனினும் அவர் மறையவராம்!

Edited Printed and Published by C. N. Annadurai M.A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet, Conjeeveram.